வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    03.12.2024 செவ்வாய்க்கிழமை    இதழ் : 337    பக்கங்கள் : 12

# மாகாண சபை முறைமை அகற்றலை ஏற்கமுடியாது!

## ரில்வினின் கருத்துக்கு மனோ பதிலடி

கொழும்பு, டிசெம்பர் 03

“மாகாணசபை என்பதை நாம் ஏற்கமாட்டோம். ஆனால், இன்றைய மாகாணசபை முறைமை என்பது தமிழ் மக்களின் போராட்டங்களால் கிடைக்க பெற்றது. ஆகவே, அதை நாம் எதிர்க்கவும் போவதில்லை” என ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, கடந்த தேர்தல்களுக்கு முன் என்னிடம் நேரடியாக கூறியுள்ளார். பல தமிழ் தலைவர்களிடமும் அவர் இந்த கருத்தை கூறி இருப்பதை நான் அறிவேன். இப்போது மாகாண சபையை அகற்றி விட்டு அதற்கு பதில் நாடு தழுவிய, சம உரிமையை தருவோம்” என தேசிய மக்கள் சக்தி தலைவர்கள் கூறுகிறார்கள். சம உரிமை வருவது நல்லதே. ஆனால், சம உரிமை என்பது வேறு. அதிகார பகிர்வு என்பது வேறு என்பதை அவர்கள் தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

11

# ரில்வினின் கருத்து அரசின் நிலைப்பட்டா?

### கேள்வி எழுப்புகிறார் சத்தியலிங்கம்

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ.03

ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வாவின் கருத்துதான் அரசாங்கத்தின் கருத்தாகவும் நிலைப்பாடாகவும் உள்ளதா என்பதனை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என தமிழரசுக்கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வைத்தியர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் மக்கள் சந்திப்பொன்றில் நேற்று கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டு வரப்பட்டதே 13 ஆவது அரசியல் அமைப்பு சட்டமா கும். இதுவே இலங்கை அரசியல் யாப்பிலும் கொண்டுவரப்பட்டது.

11

# இனப்பிரச்னையை தீர்க்கும் வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டும்!

### அரசிடம் கோருகிறார் செல்வம் எம்.பி.

மன்னார், டிசெ. 03

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எந்த காலத்திலும் புதிய அரசியல் சாசனத்தின் ஊடாக நிறுத்தக்கூடாது எனவும் தமிழ் மக்களின் இனப்பிரச்னை தீர்க்கும் வகையில் புதிய அரசியல் சாசனம் அமைய வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசியல் சாசனத்தில் 13 ஆவது திருத்தச் சட்டம் இல்லாது ஒழிக்கப்படும் என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இதன் நோக்கம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை மீறுகின்ற ஒரு செயல்பாடாக அமையும்.

ஒரு அரசியல் சாசனம் வருகின்றபோது, தமிழ்த் தரப்பிடமும் ஆலோசனையும் பெற்று அதன் பின்னர்

11

# இன்று கூடுகிறது பாராளுமன்றம்!

கொழும்பு, டிசெ. 03

பாராளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் அசோக ரன்வல தலைமையில் கூடவுள்ளது.

10ஆவது பாராளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு நவம்பர் 21 ஆம் திகதி நடைபெற்றது. அன்றைய தினம் சபாநாயகர் தெரிவு, பிரதி சபாநாயகர் தெரிவு, குழுக்களின் பிரதி தவிசாளர் தெரிவு, பாராளுமன்ற உறுப்பினர்களின்

11

# கிணற்றுக்குள் தவறி விழுந்த பூசகர் பரிதாபமாக உயிரிழப்பு

### சுதுமலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 03

வீட்டு கிணற்றில் குளித்துக்கொண்டு இருந்தவேளை தவறி கிணற்றினுள் விழுந்த பூசகர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதன்போது சுதுமலை தெற்கு, மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த மகாலிங்கம் கருணாகரன் (வயது - 52 ) என்ற பூசகரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பூசகர் மரணச் சடங்கு ஒன்றிற்கு சென்று விட்டு வீட்டுக்கு வந்து குளித்துக்கொண்டு இருந்த வேளை கால் தவறி கிணற்றினுள் விழுந்து உயிரிழந்தார். அவரது சடலம் கிணற்றினுள் மிதப்பதை அவதானித்த உறவினர்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர்

11

# உக்ரைனுக்கு எதிராக நடக்கும் யுத்தத்தில் யாழ். இளைஞர்கள்!

### ரஷ்ய தூதரகம் முற்றிலும் மறுப்பு

கொழும்பு, டிசெ. 03

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர்கள் உக்ரனுக்கு எதிராக போரிடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என வெளியான தகவல்களை இலங்கைக்கான ரஷ்ய தூதரகம் மறுத்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ரஷ்ய தூதரகம் இதனை தெரிவித்துள்ளது.

பெல்ஜியத்துக்கு செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர்கள் உக்ரைனுக்கு

11

# சிறீதரன்-கஜேந்திரகுமார் சந்தித்து முக்கிய பேச்சு!

கொழும்பு, டிசெ. 03

புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடியவகையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு உள்வாங்கப்படவேண்டியதன் அவசியம் குறித்தும், அதனை இலக்காகக் கொண்டு அடுத்த கட்டமாக முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பாராளுமன்ற உறுப் பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சிவஞானம் சிறிதரன்

11

# மீனவர்களின் பிரச்னைகளுக்கு விரைவில் நிரந்தர தீர்வு கிட்டும்!

### கடற்றொழில் பிரதி அமைச்சர் உறுதி

கொழும்பு, டிசெ. 03

நாட்டிலுள்ள மீனவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்னைகளுக்கு விரைவில் நிரந்தர தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என கடல்தொழில் பிரதி அமைச்சர் ரி.ஜி. ரத்னகமகே உறுதியளித்துள்ளார்.

திருக்கோவில் பிரதேசத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட கடல்தொழில் பிரதி அமைச்சர் ரத்னகமகே அப்பிரதேசத்தில் வசிக்கும் மீனவர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலின்போதே மீனவர்கள் எதிர் கொண்டுவரும் பிரச்னைகளுக்கு தீர்வினை

11

# ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளராக கயந்த கருணாதிலக நேற்று நியமனம்!

கொழும்பு, டிசெ. 03

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வெகுஜன ஊடக அமைச்சராகவும் ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளராகவும் பணியாற்றினார்.

அத்துடன், அமைச்சரவை ஊடகப் பேச்சாளராகவும் அவர் பணியாற்றியுள்ளார். கயந்த

11

# கல்வி அமைச்சு முன் நேற்று ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, டிசெ. 03

இசுறுபாய முன்பாக நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பாடசாலை அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் குழுவினரில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை இரண்டு பொலிஸார் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆசிரியர் சேவையில் தம்மை நிரந்தரமாக இணைத்துக்கொள்ளுமாறு வலியுத்தி அபிவிருத்தி உத்தியோகத தர்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

11

# வட்டி விகிதத்தை நிலையாக பேணுவது மிகஅவசியமாகும்

கொழும்பு. டிசெ. 03

பணவீக்கம் அதிகரிக்காத வகையில் நிலையான வட்டி வீதத்தை பேணுவது மத்திய வங்கியின் பொறுப்பாகும் எனவும், கடந்த காலங்களில் அவ்வாறு நடக்கவில்லை எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பணவீக்கம் வேகமாக அதிகரித்துள்ள போதிலும், தற்போதைய நிதிக் கொள்கையின் படி இது நடக்காது எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம உத்தியோகத்தருடன் பொதுமக்கள் வாய்த்தர்க்கம்

## இருவர் கைது, மக்கள் போராட்டம்




யாழ்ப்பாணம், டிசெ. 03

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள சில குடும்பங்களுக்கு உணவு வழங்கப்படாமையால் பொதுமக்களுக்கும், கற்கோவளம் கிராம உத்தியோகத்தருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதனால் தனது கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்று கற்கோவளம் கிராம உத்தியோகத்தர், பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து, இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் கிராம உத்தியோகத்தரால் பாதிக்கப்பட்ட மக்கள் நேற்றுக் காலை போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

தமது வீட்டில் வெள்ளம் தேங்கியதால் தாம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்ததாகவும், அங்கு கிராம உத்தியோகத்தர் வேண்டுமென்றே தம்மை புறக்கணித்து தமக்கு உணவு வழங்கவில்லை என்றும், இதனை கிராம உத்தியோகத்தரிடம் கேட்டமையாலேயே தனது கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்று தெரிவித்து பொய் முறைப்பாடு செய்துள்ளார். கிராம உத்தியோகத்தர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் இருவர் கைதுசெய்யப்பட்டனர் என பாதிக்கப்பட்ட மக்கள் கூறினர்.

இது தொடர்பில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளரிடம் கேட்டபோது, பக்கச்சார்பற்ற விசாரணை குழு ஒன்று அமைக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்ததுடன், ஏதாவது முறைகேடுகள் இடம்பெற்றால் உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை கைதான இருவரையும் பருத்தித்துறை நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை முன்பாக பருத்தித்துறை பொலிசார் நேற்று முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதவான் குறித்த இருவரையும் நாளை 04ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் (எ-2-5)

# மடிச்சுக்கட்டி நோயை கட்டுப்படுத்த விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டும்

## கிளிநொச்சி பிரதி விவசாய பணிப்பாளர் கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ. 03

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் வயல்களில் கபில நிறத்தத்தி மற்றும் மடிச்சுக்கட்டி நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் சோதிலட்சுமி விஜயதாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி விவசாய திணைக்கள அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த சில தினங்களாக மழையுடன் கூடிய காலநிலையால் மடிச்சுக்கட்டி நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களிலும் குறித்த நோய்த் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது.

புளியம்பொக்கணை, பளை, முரசுமோட்டை, பெரிய பரந்தன் உள்ளிட்ட பகுதிகளில் இந்த நோய்த் தாக்கம் அதிகளவில் காணப்படுகிறது.

இந்த நிலையில், விவசாயிகள் தங்கள் பிரிவு விவசாய போதனாசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் மடிச்சுக்கட்டி நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும்"- என்றார்.

அத்துடன், வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்கள் மற்றும் சிறுதானியம், மரக்கறி செய்கைகளின் அழிவு விவரங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(எ)

# யாழில் சிறப்பாக இடம்பெற்ற கந்தர்மடம் அஜந்தனின் இரு நூல்கள் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 03

எழுத்தாளரும், சமூக செயற்பாட்டாளருமான கந்தர்மடம் அஜந்தனின் 'மரணங்களின் சாட்சியாக' எனும் சிறுகதைத் தொகுதி மற்றும் 'ஆற்றுப்படுத்தும் கலையும் சிலையும்' கட்டுரைத்தொகுதி ஆகிய இரு நூல்களினதும் வெளியீட்டுவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணத்தில் ராஜா கிறீம் ஹவுஸ் ஹம்சியா மகாலில் இடம்பெற்றது.

மூத்த எழுத்தாளரும் சிரேஷ்ட உளவியலாளருமான கோகிலா மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வு மங்கல விளக்கேற்றலுடனும், ஆசிரியர் சிறீ யதுர்சன் மற்றும் மாணவர்களின் இசை விருந்துடனும் இனிதே ஆரம்பமாகியது.

கோகிலா மகேந்திரனின் தலைமை உரையை தொடர்ந்து எங்கட புத்தகங்கள் நிறுவனர் குலசிங்கம் வசீகரனால் அறிமுக உரை நிகழ்த்தப்பட்டது.

நூலின் வெளி''ீட்டுரையினை ஜீவநதி இதழின் பிரதம ஆசிரியரான கலாமணி பரணீதரன் நிகழ்த்தினார்.



தலைமைப் போதகர் லெஸ்லி மத்தியூஸ் நூல்களினை வெளியிட்டு வைக்க முதற்பிரதிகளை பிராந்திய முகாமையாளர் ம.பிரபாகரன், யாழ் டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் ஆகியோரும் பெற்றுக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கி வைக்கப்பட்டது.

'மரணங்களின் சாட்சியாக' சிறுகதை தொகுதி நூல் தொடர்பிலான கருத்துரையினை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரும் - எழுத்தாளருமான இ. இராஜேஸ்கண்ணன் நிகழ்த்தினார்.

'ஆற்றுப்படுத்தும் கலையும் சிலையும்' கட்டுரைத்தொகுதி நூல் தொடர்பிலான கருத்துரையினை ஆயுர் வேத மருத்துவரும், சிரேஷ்ட உளவளத் துணையாளருமான புவனலோஜினி ஜீவானந்தம் நிகழ்த்தினார்.

நிகழ்வின் இறுதியில் கந்தர்மடம் அஜந்தனினால் வரையப்பட்ட ஓவியங்கள், நூல் வெளியீட்டு நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக பங்கேற்று சிறப்பித்தவர்களுக்கு கோகிலா மகேந்திரனால் வழங்கி வைக்கப்பட்டது.

எழுத்தாளர்கள், உளவியலாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் என அரங்கம் நிறைந்த நிகழ்வாக இந் நிகழ்வு நடந்தேறியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெள்ள அனர்த்தத்தின் பின்னர் எலிக் காய்ச்சல் பரவும் ஆபத்து!

## கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்

கிளிநொச்சி, டிசெ. 03

வெள்ள அனர்த்தத்தின் பின்பு எலிக்காய்ச்சல் பரவும் ஆபத்து மக்கள் விழிப்பாக செயற்படுமாறு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த. வினோதன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் குறித்த விடயத்தை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

அண்மை நாட்களாக இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தினால் பெருமளவானோர் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தனர்.

மேலும் , இவர்கள் வெள்ள நீரில் பயணம் செய்திருந்தனர்.

வெள்ளநீர் மூலம் எலியின் சிறுநீர் மூலம் பக்ரீறியா தொற்று ஏற்பட்டு குறித்த நோய் ஏற்படுகிறது.

எனவே கடுமையான காய்ச்சல் மற்றும் கால் நோ, கண் சிவப்பு போன்ற அறிகுறி காணப்பட்டால் மருத்துவ உதவியைப்பெற்று எலிக்காய்சலிருந்து பாதுகாக்கவேண்டும்- என்றார். (அ)

# வவுனியா கொலை; ஒருவர் கைதானார்

வவுனியா, டிசெ. 03

வவுனியா, இளமருதங்குளம் பகுதியில் நேற்று முன் தினம் மாலை வாளால் வெட்டி ஒருவரைக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளமருதங்குளம் பகுதியில் பழைய பகை ஒன்றின் காரணமாக ஐந்து பேர் கொண்ட குழுவினர் வவுனியாவிலிருந்து இளமருதங்குளம் பகுதிக்குச் சென்று அங்கு வசிக்கும் 46 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரை வாளால் வெட்டி கொலை செய்திருந்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக கூமாங்குளத்தைச் சேர்ந்த வாகன உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரை வவுனியா நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். ஏனைய சந்தேக நபர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என கூறப்படுகிறது. (அ)

# "ஈழத்து கலைஞர்களுக்கான ஊக்குவிப்பே அடுத்த நிலைக்கு கொண்டு செல்லும்"

முல்லைத்தீவு, டிசெ. 03

ஈழத்து கலைஞர்களை ஊக்குவிப்பதன் மூலமே அந்தக் கலைஞர்கள் அடுத்த நிலைக்கு செல்ல முடியும் என்று குறுந்திரைப்பட இயக்குநர் செல்வராசா தனுசன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தோல்வி நிலையென நினைத் தால்" எனும் குறும் திரைப்படம் ஒன்றை தயாரித்து ஈகிள் ஸ்ரூடியோ எனும் யூ - ரியூப் தளத்தில் வெளியிட்டிருக்கின்றோம். அதனை நீங்கள் பார்க்க முடியும்.

இக் குறும்திரைப்படத்தில் அதிக ஈழத்து கலைஞர்கள் நடித்திருக்கிறார்கள்.

அதிலும் ஈழத்தில் பிரசித்தி பெற்ற நடிகர்களும் இணைந்து நடித்திருக்கிறார்கள்.

ஈழத்தில் தயாரித்து வெளியிடப்பட்ட குறுந்திரைப்படம் என்பதால் எமது கலைஞர்களை அனைவரும் ஊக்குவிக்க வேண்டும். ஊக்குவிப்பதன் மூலமே கலைஞர்கள் அடுத்த கட்ட முழுநீள திரைப்படம் நோக்கி நகர முடியும்.

இந்த படத்தை அனைவரும் பாருங்கள். உங்களுக்கு பிடித்திருந்தால் எமக்கு முழு ஆதரவை தாருங்கள். தொடர்ந்து நாம் ஈழத்து சினிமாவை வளர்ப்பதற்குத் தயாராக இருக்கின்றோம் .

மக்கள் அனைவரும் எம் குறும்படத்தை பார்த்து உங்கள் விமர்சனங்களை கூறவேண்டும். அது தான் எம் அடுத்த கட்ட நகர்வுக்கு உறுதுணையாக இருக்கும்- என்றார்.

சதீஸ்கரனின் தயாரிப்பிலும் செல்வராசா தனுசனின் இயக்கத்திலும், விக்னேஸ்வரன் மற்றும் எஸ். ஜே. லைபனின் துணை இயக்கத்திலும் "தோல்வி நிலையென நினைத் தால்"என்ற குறுந்திரைப்படமானது வெளிவந்துள்ளது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
03.12.2024 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்திய - இலங்கை ஒப்பந்தம்

இந்திய - இலங்கை ஒப்பந்தம் மீறப்படப் போகின்றதா? அதனை மீறக் கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருக்கின்றார். அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை ஓர் அரசியல் தீர்வாக தமிழர் தரப்பு இதுவரையில் பொது வெளியில் பேசியதில்லை. இந்திய இராஜதந்திரிகளை சந்திக்கும் போதெல்லாம், அழுத்தங்களை பிரயோகியுங்கள் என்று கூறிவிட்டு, மறுபுறம் பதின்மூன்றிற்கும் தங்களுக்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லாதது போன்றே இவர்கள் செயல்படுவதுண்டு. தமிழ் மக்களின் மத்தியில் உண்மை நிலைமைகளை தெளிவுபடுத்தி, யதார்த்தபூர்வமான அரசியலை முன்னெடுக்க தமிழ் தேசியம் பேசும் கட்சிகள் இதுவரையில் முயற்சித்ததில்லை.

இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதுவதில் முனைப்புக் காட்டிய ரெலோ, அந்தக் கடிதம் அனுப்பப்பட்ட பின்னர் புதுடில்லியை நோக்கி எவ்வாறான லொபியை மேற்கொண்டிருந்தது? அதிலும் அந்தக் கடிதத்தில் சம்பந்தனது கையெழுத்து முக்கியம், அப்போதுதான் மோடி கடிதத்தை படிப்பார் என்றெல்லாம் தடுமாறி, இறுதியில் ஒரு மாதிரியாக கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் கடிதம் புதுடில்லிக்குச் செல்வதற்கு முன்னரே யாழ்ப்பாணத்திலுள்ள சாதாரண செய்தியாளர்களின் கைகளில் கூட அந்தக் கடிதம் இருந்தது. ஒரு பிராந்திய சக்திக்கு அனுப்பப்பட்ட கடிதம் எந்தளவு அவதானத்துடனும், தூர நோக்குடனும் அனுப்பப்பட்டிருக்க வேண்டும் - அவ்வாறு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை.

இந்தியாவின் கொள்கை நிலைப்பாடு என்ன என்பது மிகவும் வெளிப்படையானது. இந்தியா ஈழத் தமிழர்களுக்கான அரசியல் இருப்பை அங்கீகரிக்கும் நாடு - அதற்கான ஒரு ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு தேவை என்பதே இந்தியாவின் நிலைப்பாடு. இந்தியாவின் நிலைப்பாடானது ஓர் அறிவிக்கப்பட்ட நிலைப்பாடாகும். இந்தியா மட்டும்தான் அவ்வாறானதொரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் ஒரேயொரு நாடு. இந்தியாவில் எவர் ஆட்சியில் இருந்தாலும் இதுதான் நிலைப்பாடு. தமிழ் கட்சிகளுக்கு இந்த விடயத்தில் எந்தவொரு பங்கும் இல்லை. தமிழ் கட்சிகள் ஏற்றுக் கொண்டாலும் - ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இதுதான் நிலைப்பாடு.

தற்போதைய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி. சுப்பிரமணியம் ஜெயசங்கர் இதனை மிகவும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார். இது பாரதிய ஜனதாவின் நிலைப்பாடு இல்லை - இதற்கு முன்னர் இருந்தவர்கள் அனைவரதும் நிலைப்பாடாகும் - மொத்தத்தில் இந்தியாவின் நிலைப்பாடு. எனவே ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் தலையிடும் எல்லை என்பது தொடர்பில் தெளிவான அனுபவம் இருக்கின்ற போது, இந்தியாவிடம் அதன் தலையிடும் எல்லைக்கு வெளியில் எதிர்பார்ப்பதானது, தமிழ் அரசியல் தலைமைகள் என்போரின் அறிவுக் குறைபாடாகவே நோக்கப்பட வேண்டும்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் 13ஆவது திருத்தச்சட்டத்தை தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) அரசாங்கம் நீக்கப் போகின்றது என்றால் - அதற்கு மாற்றான திட்டம் என்ன என்பதையும் அது வெளிப்படுத்தும் - அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்துடன் நேரடியாக மோதுவதாக இருந்தால் அதனை இந்தியா பார்த்துக் கொள்ளும். இந்தியாவின் நலன்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது இந்தியாவிற்குத் தெரியும் - அது தொடர்பில் இந்தியாவை விடவும் தங்களுக்குத்தான் அக்கறை இருப்பதான நாடகங்களை, தமிழ் கட்சிகள் மேற்கொள்ள வேண்டியதில்லை. தமிழ் கட்சிகளிடம் நேர்மையிருந்தால், முதலில் மக்களுக்கு உண்மையை கூற வேண்டும். தங்களை ஒழுங்குபடுத்த வேண்டும். தமிழ் கட்சிகளின் இன்றைய நிலை என்ன என்பதும் இந்தியத் தூதரகத்திற்கு நன்கு தெரியும்.

# வீதியில் வீசப்படும் கழிவுகளால் மானிப்பாய் மக்கள் அசௌகரியம்

## பிரதேச சபை கண்டுகொள்ளவில்லை என விசனம்

*யாழ்ப்பாணம், டிசெ. 03*

மானிப்பாய் மடத்தடி வீதியில் வீட்டுக் கழிவுகளையும் விலங்குக் கழிவுகளையும் வீசி செல்வதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அவ்வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாவதுடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

இவ்வீதிக்கு அருகே வாழும் குடும்பங்களுக்கு தொற்று நோய் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. பிளாஸ்ரிக், தகரப் பேணிகளில் நீர் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இவ் வீதியிலுள்ள மின் விளக்குகளும் ஒளிர்வதில்லை. இதனை பிரதேச சபை திருத்தம் செய்வதும் இல்லை. இது குறித்து பிரதேச சபையின் செயலாளருக்கு தெரியப்படுத்திய போதிலும் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

(எ- 05)

## திருவாசக சிறப்பு சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், டிசெ. 03*

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 34 பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 6 ஆம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து சொற்பொழிவை இளஞ்சைவப் புலவர் பிரசங்க வாரிதி ச. நவநீதன் “மாணிக்கவாசகரும் உயிருண்ணிப்” என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (எ)

## நீர்வேலியில் சுக்கிர வார சிறப்பு சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், டிசெ. 03*

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் வாராந்தச் சுக்கிர வாரக் கந்தபுராண தொடர் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமி நாதக்குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரை ஆற்றுவார். இதனையடுத்து இளஞ் சைவப்புலவர் த. மனோஜ் குமார் “மோனநீங்கு படலம்” என்னும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவு ஆற்றுவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(எ)

## வவுனியாவில் சுகவீனமடைந்த யானைக்கு தொடர்ந்து சிகிச்சை

*வவுனியா, டிசெ. 03*

வவுனியாவில் சுகவீனமடைந்த நிலையில் மீட்கப்பட்ட காட்டு யானைக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா குடாகச்சக்கொடி வயல்வெளியில் சுகவீனம் காரணமாக வீழ்ந்து கிடந்த யானை ஒன்று வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் அண்மையில் மீட்கப்பட்டது.


இதற்கு கடந்த ஐந்து நாட்களாக சிகிச்சை அளிக்கப்பட்டுவரும் நிலையில் அதன் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



எட்டு வயது மதிக்கத்தக்க குறித்த யானை, மோசமான காலநிலை காரணமாக வயலில் தவறி விழுந்ததாக வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் கூறினர்.

இதேவேளை, வன ஜீவராசிகள் திணைக்களத்தின் வட மாகாணத்துக்கு பொறுப்பான கால்நடை வைத்திய அதிகாரி பா. கிரிதரனின் தலைமையில் குறித்த யானைக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். அதற்காக அலுத்துக் கொள்ளாதீர்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**இடபம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். மூத்த சகோதரர் வகையில் உதவிகள் கிடைக்கும். மனைவி வழி உறவினர்கள் பக்க பலமாக இருப்பார்கள். எல்லோரும் மதிப்பார்கள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். விருந்தினர்கள் வருகையால் வீடு களைக்கட்டும். புது அனுபவம் உண்டாகும்.

**கடகம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**சிம்மம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். நீண்ட நாட்களாக வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள்.

**கன்னி**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். மனதிற்கு இதமான செய்தி வரும்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புது முடிவுகளை எடுப்பீர்கள். அழகும் இளமையும் கூடும். நீண்ட நாள் பிரச்னை தீரும். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள். சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. உத்தியோகத்தில் பனிப்போர் வந்து நீங்கும்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். மோதல்கள் வந்து நீங்கும்.

**மகரம்**
குடும்பத்தில் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். உற்சாகமான நாள்.

**கும்பம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**மீனம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

# 697.4 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி 73 ஆயிரத்து 693 பேர் பாதிப்பு

## யாழ். மாவட்ட அரச அதிபர் பிரதீபன் தகவல்



யாழ்ப்பாணம், டிசெ. 03

கடந்த நவம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் இம்மாதம் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 697. 4 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நவம்பர் மாதம் 26 ஆம் திகதி 24 மணி நேரத்தில் 253 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளது. இது ஒரு பாரிய அளவாக காணப்படுகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 21 ஆயிரத்து 980 குடும்பங்களைச் சேர்ந்த 73 ஆயிரத்து 693 பேர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். 29ஆம் திகதி வரை 82 இடைத்தங்கல் நிலையங்களில் 2,163 குடும்பங்களைச் சேர்ந்த 7417 பேர் தங்க வைக்கப்பட்டிருந்தனர். டிசெம்பர் முதலாம் திகதி வரை 26 இடைத்தங்கல் நிலையங்களில் 692 குடும்பங்களைச் சேர்ந்த 2393 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மழை வீழ்ச்சியினுடைய தன்மை அல்லது அளவு குறைவடைந்து காணப்படுகின்றமையால் மக்கள் தங்களுடைய வீடுகளுக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். இருந்த போதிலும் பல இடங்களில் வெள்ள நீரோட்டம் இயல்பான நிலையில் காணப்படாததால் வெள்ளப் பாதிப்பு நீடிக்கிறது. இவ்வாறான பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தொடர்ந்தும் இடைத்தங்கல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குரிய சமைத்த உணவு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

சில பிரதேச செயலாளர் பிரிவில் அரசாங்க நிதி ஒதுக்கீட்டின் மூலம் சமைத்த உணவு வழங்கப்படாமையை அவதானிக்க முடிந்தது. உடனடியாகவே அந்த மக்களுக்குத் தேவையான காலப்பகுதிகளுக்கு சமைத்த உணவை அரச நிதியின் மூலம் வழங்குவதற்கு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன்.

சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உப்புக்கேணி என்ற பகுதியிலே நீர் வழிந்து ஓட முடியாமல் 50 குடும்பங்கள் தங்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியிருக்கிறார்கள். வெள்ளநீர் உடனடியாக வடிந்தோடக்கூடிய சாத்தியப்பாடு இல்லாத காரணத்தால் நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் அந்த நீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதேபோன்று பல்வேறுபட்ட முறைப்பாடுகளும் எங்களுக்கு கிடைத்த வண்ணம் உள்ளன. வெள்ளம் வடிந்தோட முடியாத நிலை தொடர்ந்து காணப்படுமாயின் அதற்குரிய பொருத்தமான பொறிமுறை மூலம் வெள்ளம் அகற்றப்பட உள்ளது.

தொடர்ச்சியாக எதிர்வரும் காலங்களில் இவ்வாறான வெள்ள நிலவரங்கள் ஏற்படும் பட்சத்தில் நாங்கள் முற்கூட்டியே வடிகால் அமைப்பு முறைகளை சரியான விதத்தில் பேணிக்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. இதற்காக அனைத்து திணைக்களங்களின் ஒத்துழைப்பையும் நாங்கள் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

எதிர்வரும் காலத்தில் நாங்கள் பிரதேச செயலாளர் ரீதியாக, எந்தெந்த பிரதேசங்களில் வெள்ளம் வடிந்தோட பொருத்தமான முறை இல்லை என்ற தரவுகளைப் பெற்று, அதற்குத் தீர்வு வருவதற்கு அனைத்து திணைக்களங்களையும் ஒருங்கிணைத்து, நேரடியாக அந்தப் பகுதிக்குச் சென்று என்னென்ன விடயங்களை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில், அதற் குரிய நிதி ஒதுக்கீடுகளை அமைச்சின் மூலம் பெற்று வேலைத்திட்டங்களை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆகவே அனைத்து திணைக்களங்களிடமும் அதற்கான உதவி எங்களால் கோரப்படவுள்ளது- என்றார். (எ-05)

# வீட்டைச் சுற்றி பாம்புகள் நாம் எவ்வாறு வாழ்வது?

## வட்டுக்கோட்டையில் இடம்பெயர்ந்த மக்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 03

வெள்ள அனர்த்தம் காரணமாக வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 20 பேர் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர்.

இவர்கள் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, ஜே - 57 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிப்பவர்கள்.

தமது வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதாகவும், வீட்டைச் சுற்றி பாம்புகள் உள்ளதாகவும் தரிவித்த அவர்கள், இவற்றை எல்லாம் சீர்செய்து வழங்கினால் மட்டுமே தங்களால் வீடுகளுக்குச் செல்ல முடியும் என் றும் தெரிவித்தனர்.

இந்தப் பிரச்னை ஒவ்வொரு வருடமும் இடம் பெறு வதாகவும், இதற்கு ஒரு தீர்வு வழங்கப் பட வேண்டு



மெனவும் கோரிக்கை விடுத்தனர். (எ-05)

# சாவகச்சேரி உப்புக்கேணி கிராமத்தில் வெள்ளத்தை வெளியேற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 03

சாவகச்சேரி கச்சாய் உப்புக் கேணி கிராமத்தில் வெள்ள அனர்த்தத்தால் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட பதில் அரச அதிபர் ம. பிரதீபனுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, அந்த மக்களை நேரில் சென்று சந்தித்ததோடு வெள்ளப்பாதிப்புகளையும் ஆய்வு செய்தார்.

இப்பிரதேசத்தில் வெள்ளம் இயற்கையாக வடிந்தோடுவதற்கு ஏற்ற வழிவகைகள், வெள்ளத்தை வெளியேற்றுவதற்கான பொறிமுறையை ஆராய்ந்து வெள்ள நீரை தற்காலிகமாக தண்ணீர் பம்புகள் ஊடாக வெளியேற்றுவதற்கான நடவடிக்கை பதில் அரசாங்க அதிபரால் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், எதிர்காலத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்படாத வகையில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் விரைவில் கூட்டத்தை நடத்தி நிரந்தரத் தீர்வு காணலாம் என அப் பகுதி பொது மக்களிடம் பதில் அரச அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சை முடிந்த பின் உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பு

## தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம்

கொழும்பு, டிசெ. 03

**கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

இது தொடர்பான அறிவிப்பு தற்சமயம் வெளியிடப்பட்டால், பரீட்சைகள் காலத்தின்போது, வேட்பாளர்கள் பிரசார நடவடிக்கைகளை தொடங்குவார்கள்.

எனவே, பரீட்சைக்கு இடையூறு ஏற்படும் என்பதால் அது முடியும் வரை தேர்தல் தொடர்பான அறிவிப்பை வெளியிடுவதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

மோசமான காலநிலை காரணமாக, பரீட்சை சில நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட பரீட்சை நடவடிக்கைகள் இந்த வாரம் மீண்டும் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான விசேட கட்சித் தலைவர் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இந்த கூட்டம் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பான வேட்புமனுக்களை மீளப் பெறுவது தொடர்பிலும் இதன் போது இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

வேட்புமனு தாக்கல் செய்த வேட்பாளர்கள் கட்சி மாறியதாலும், சிலர் வெளிநாடு சென்றுள்ளதாலும், மேலும் சிலர் அரசியலில் இருந்து விலகியதாலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்ய அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# அரசியலிலிருந்து இடைவேளை பெற்றுக்கொள்கின்றார் பந்துல

கொழும்பு, டிசெ. 03

தாம் அரசியலிலிருந்து இடைவேளையைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மூன்றில் இரண்டு அறுதிப் பெரும்பான்மையை வழங்கி புதிய கொள்கைகளைக் கொண்ட அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் பிரச்னைகளுக்கு உரியத் தீர்வுகள் தங்களிடம் உள்ளதாக அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு ஜனநாயக ரீதியில் இடமளிக்கவேண்டும் என்பது எமது பொறுப்பாகும்.

இந்நிலையில், எந்தவொரு அரசியல் நடவடிக்கைகளிலும் நான் ஈடுபடப் போவதில்லை.

அத்துடன் நான் எந்தவொரு அரசியல் கட்சியிலும் அங்கம் வகிக்கவில்லை.

ஒரு கலாநிதி பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக நாட்டிலிருந்து வெளியேறவுள்ளேன்.

ஆகையால் அரசியலிலிருந்து தற்காலிக இடைவேளை ஒன்றைப் பெற்றுக் கொள்ளவுள்ளேன் -என்றார். (அ)

# சேதமடைந்த வீதிகள், பாலங்கள் தகவல்கள் சேகரிக்க நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 03

கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழையினால் சேதமடைந்த வீதிகள், பாலங்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்கும் வேலைத்திட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பல வீதிகள், பாலங்கள் சேதமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன என அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதனால், குறித்த வீதிகள் தொடர்பிலான தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவற்றை உடனடியாக புனரமைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எஸ்.எம்.பி. சூரியபண்டார குறிப்பிட்டார்.

அத்துடன், மழையுடன் கூடிய காலநிலை காரணமாக சேதமடைந்த மனம்பிட்டிய அரலகங்வில வீதி மிகக் குறுகிய காலத்தில் போக்குவரத்துக்காக மூடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, கடும் மழையினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் நீரியல் வள பிரதி அமைச்சர் ரத்ன கமகே குறிப்பிட்டுள்ளார். (அ)

# காலாவதியான பொருட்கள் பதுக்கப்பட்ட பல களஞ்சியசாலைகள் சுற்றிவளைப்பு!

கொழும்பு, டிசெ. 03

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் தகவல்களை மாற்றி சந்தையில் வெளியிடுவதற்கு தயார்ப்படுத்தப்பட்டருந்த இறக்குமதி செய்யப்பட்ட கடலை, அரிசி மற்றும் காலாவதியான பேரீச்சம்பழம் களஞ்சியப்படுத்தப்பட்ட பல களஞ்சியசாலைகளை நுகர்வோர் விவகார அதிகார சபை சுற்றிவளைத்துள்ளது.

ஆய்வுகூடங்களுக்கு விநியோகிப்பதற்கு தயாரிக்கப்பட்ட 50 லீற்றர் காலாவதியான இரசாயனப் பொருட்களையும் அந்த அதிகார சபையின் கம்பஹா மாவட்ட காரியாலய அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 28ஆம் திகதி களனி பெத்தியாகொட பிரதேசத்தில் உள்ள களஞ்சியசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே அதிகார சபை இந்த பொருட்களை கண்டறிந்துள்ளது.

மேலும் கடந்த 28ஆம் திகதி வத்தளை பிரதேசத்தில் இறக்குமதியாளர்கள் மற்றும் மொத்த வியாபாரிகளால் பராமரிக்கப்படும் களஞ்சியசாலைகளில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது, காலாவதியான 4.6 தொன் காய்ந்த மிளகாய்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததையும் விசாரணை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

காலாவதியான பொருட்களுடன் காலாவதியாகாத பொருட்களை சேமித்து வைப்பது நுகர்வோர் விவகார அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், குற்றமாகும் என்பதால் அந்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, பண்டிகை காலத்தில் காலாவதியான பொருட்கள், தகவல் மாற்றப்பட்ட பொருட்களை சந்தைக்கு அனுப்பும் வர்த்தகர்கள் மற்றும் களஞ்சியசாலைக்காரர்களைக் கண்டறிய மேலதிக சோதனைகள் மற்றும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (அ)

# சுகபோக வாழ்க்கை வாழ்வதற்காக நாங்கள் அரசியலுக்குள் வரவில்லை

## வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க

கொழும்பு, டிசெ. 03

சுகபோக வாழ்க்கை வாழ்வதற்காக நாங்கள் அரசியலுக்குள் வரவில்லை என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தையும் இதர சிறப்புரிமைகளையும் குறைப்பதாக நாம் கூறவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமை சலுகைகளை இரத்துச் செய்வதாகவே கூறியிருந்தோம்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை இரத்துச்செய்வது தொடர்பான பிரேரணை எதிர் வரும் வாரமளவில் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.



சுகபோகமாக வாழ்வதற்காக நாங்கள் அரசியலுக்கு வரவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் தங்குவதற்காக அவர்களுக்கு மாதிவெல குடியிருப்பு தொகுதியில் வீடுகள் வழங்கப்படும்-என்றார். (அ)

# அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிக்க ஜப்பான் அரசாங்கத்திடம் சஜித் கோரிக்கை!

கொழும்பு, டிசெ. 03

கடந்த காலங்களில் ஜப்பான் அரசாங்கத்தினால் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்குத் தேவையான பூரண ஒத்துழைப்பை எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு தாம் வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் ஜப்பானியத் தூதுவர் இசோமடா அகியோவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் நீண்ட காலமாக இருந்து வரும் இராஜதந்திர உறவைத் தொடர்ந்தும் பேணுமாறும், அதற்குத் தாம் முழுமையான பங்களிப்பை வழங்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ஜப்பானியத் தூதுவரிடம் தெரிவித்துள்ளார். (அ)

# மலையக ரயில் சேவை வழமைக்கு!

கொழும்பு, டிசெ. 03

நேற்று முதல் மலையக ரயில் பாதையூடான ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 26 ஆம் திகதி உடுவர பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் 7 ஆம் மைல் கம்பத்துக்கு அருகில் தண்டவாளங்கள் மண்ணில் புதையுண்டதில் 5 நாட்களாக மாலையக பாதையூடான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், நேற்று முதல் மலையக ரயில் பாதையின் ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# பண்டிகைக் காலத்தில் நுகர்வோருக்கு ஏற்படும் அநீதிகளை தடுப்பதற்கு விசேட வேலைத்திட்டம்

கொழும்பு, டிசெ. 03

டிசெம்பர் பண்டிகைக் காலத்தில் சந்தையில் நுகர்வோருக்கு ஏற்படக்கூடிய அநீதிகளைத் தடுப்பதற்காக நுகர்வோர் விவகார அதிகார சபை விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

அதன்படி, நேற்று முதல் ஜனவரி 15ஆம் திகதி வரை சந்தை வர்த்தக நிலையங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் சோதனை நடத்தப்படவுள்ளது.

பண்டிகைக் காலங்களில் நுகர்வோரால் அதிகளவில் கொள்வனவு செய்யப்படும் ஆடைகள், நீடித்து நிலைத்திருக்கும் பொருட்கள், மின் உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட உள்ளதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

வர்த்தக நிலையங்களில் குறிப்பிட்ட விலையில் பொருட்களை விற்பனை செய்வதற்கான முறையான விலைப்பட்டியல் காட்சிப்படுத்தல், அதற்கான பற்றுச்சீட்டு வழங்குவதல் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தரிடையே பிரிவினை ஏற்படுத்த புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் சதி!

## ஓமல்பே சோபித்த தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 03

**சில தரப்பினர் பௌத்தர்களிடையே பிரிவினைகளை ஏற்படுத்துவதற்கு சதித் திட்டங்களை மேற்கொண்டு வருவதாகக் கலாநிதி ஓமல்பே சோபித்த தேரர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் இதனைத் தெரி வித்த அவர், புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இந்த சதித்திட்டங்களுக்காக வரையறையின்றி நிதியளித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சில கட்டுக்கதைகளால் மத நம்பிக்கைகளை மட்டுப்படுத்த முடியாது.

இவ்வாறான மட்டுப்பாடுகளை மேற்கொள்வதற்கு சில சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வேலைத்திட்டத்தின் முதற்படியாக பௌத்தர்களுக்கு இடையில் பிரிவினைகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பௌத்த தர்மத்தை அடிப்படையாகக் கொண்டே, சிங்கள இனத்தவர்களுக்கு இடையிலான பலம்வாய்ந்த பிணைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

எனினும், கட்டுக்கதைகளை நம்பும் போது, மகாவம்சம், தீப வம்சம், சூலவம்சம் என்பன செல்லுபடியற்ற நூல்களாகிவிடுகின்றன.

அதன்பின்னர், வரலாறு பொய்யாகிப் போவதுடன், இந்த மண்ணின் மூத்த குடிகளான சிங்களவர்களுக்கு உள்ள உரிமையும் இல்லாது போகும்.

இந்த பிரிவினை செயற்பாடுகளுக்காகப் புத்தக அச்சிடுதல் உள்ளிட்ட பல திட்டங்கள், பாரிய நிதிச் செலவில் முன்னெடுக்கப்படுகின்றன.

கல்கிரியாகம பகுதியில் பல ஏக்கர் கணக்கில் ஹெலகம என்ற குடியேற்றம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இதற்காக தமிழ் புலம்பெயர் அமைப்புகள் அதிகளவில் பணத்தைச் செலவு செய்துள்ளன.

இதனை நிரூபிப்பதற்கான ஆதாரங்களும் உள்ளன-என்றார். (அ)

# தீ பிடித்தது கார்!

கொழும்பு, டிசெ. 03

கொழும்பு நோக்கிச் சென்ற கார் ஒன்று தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று முன் தினம் பிற்பகல் தீப்பிடித்து எரிந்தது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாகக் குறித்த கார் தீப்பிடித்து எரிந்ததாகக் கூறப்படுகிறது.

குறித்த காரின் தீயைக் கட்டுப்படுத்த, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் உள்ள தீயணைப்புப் பிரிவினர் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பட்டதாரிகளை ஆசிரியர் பணிகளில் இணைப்பது குறித்து கலந்துரையாடல்

கொழும்பு, டிசெ. 03

பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பட்டதாரிகளை ஆசிரியர் பணியில் இணைத்துக்கொள்வது தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று கல்வி அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சங்கம், கல்வி மற்றும் உயர்கல்வி பிரதியமைச்சர் கலாநிதி மதுர சேனாரத்ன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரிய ஆராச்சி ஆகியோர் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரச்னை குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# தென்னந்தோப்பில் மின்சாரம் தாக்கி வயோதிபர் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 03

கேகாலை, மாவனெல்லை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட வெலிகல்ல பிரதேசத்தில் உள்ள தென்னந்தோப்பு ஒன்றில் மின்சாரம் தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மாவனெல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

மாவனெல்லை, வெலிகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய வயோதிபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தென்னந் தோப்பில் விலங்குகளை வேட்டையாடுவதற்காகச் சென்ற போது சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து இந்த சம்பவம் தொடர்பில் 33 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை பாதுகாப்பதில் முன்னேற்றம்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, டிசெ. 03

எயிட்ஸ் நோய் கண்டறியப்பட்ட ஆரம்ப காலத்தில் இருந்த மனோபாவத்துடன் ஒப்பிடுகையில், இந்நோய் தொடர்பான சமூக மனப்பான்மையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அத்தோடு எயிட்ஸ் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் முன்னேற்றமடைந்துள்ளோம் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதமர் ஹரிணி அமரசூரிய இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-எயிட்ஸ் நோய் கண்டறியப்பட்ட ஆரம்ப காலத்தில் இருந்த மனோபாவத்துடன் ஒப்பிடுகையில், இந்நோய் தொடர்பான சமூக மனப்பான்மையிலும் நோயினால் பாதிக்கப்பட்ட தரப்பினரிலும் பெரும் மாற்றம் காணப்படுகிறது. இது மிகவும் சாதகமான சூழலாகும். எச்.ஐ.வி. வைரஸால் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து சமூகம் அச்சத்திலும் சர்ச்சையிலும் உள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் நிராகரிக்கப்படுகின்றனர்.

ஆனால் தற்போது, சுகாதார சேவைகளில் புதிய கண்டுபிடிப்புகள், சிகிச்சை சேவைகளின் வளர்ச்சி மற்றும் சமூகத்தில் நல்ல உரையாடல் ஏற்படுவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் முன்னேற்றமடைந்துள்ளோம்.

தொற்று நோய்கள் மற்றும் பால்வினை நோய்களைத் தடுப்பதற்கு மனித உரிமைகள் மீறப்படக் கூடாது என உள் நாட்டிலும் உலக அளவிலும் அங்கீகாரம் கிடைத்துள்ளது. நல்ல உரையாடல் மூலம் செயல்படுவது முக்கியமாகும் -என்றார்.

# தேசிய மக்கள் சக்தி அரசு மக்களை ஏமாற்றியுள்ளது

## குற்றம் சாட்டுகிறார் முஜிபுர் ரஹ்மான்

கொழும்பு, டிசெ. 03

பாராளுமன்ற உறுப்பினர் அளவுக்கதிகமாக சிறப்புரிமைகளை அனுபவித்து வருவதாக தேர்தல் மேடைகளில் பிரசாரங்களை மேற்கொண்ட தேசிய மக்கள் சக்தியின் எம்.பிக்களில் பெருமளவானோர் இன்று உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு விண்ணப்பித்திருக்கின்றனர். தமக்கான வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்காக தேசிய மக்கள் சக்தி மக்களை ஏமாற்றியிருக்கிறது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-தேர்தல் பிரசாரங்களின் போது தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் தொடர்பில் பரவலாகப் பேசியது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு மக்கள் மத்தியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது கடும் கோபத்தையும் ஏற்படுத்தியது.

சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரையும் மக்கள் இம்முறை தேர்தலில் புறக்கணித்தமையில் இக்காரணி பாரியளவில் செல்வாக்கு செலுத்துகிறது.

ஆனால் தற்போது தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்த பின்னர் அன்று தேர்தல் மேடைகளில் கூறிய அனைத்தையும் மறந்து, பெருமளவான ஆளுங்கட்சி எம்.பிக்கள் உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக விண்ணப்பித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகள் எந்த வகையிலும் குறைக்கப்படவில்லை என பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது தமக்கான வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்காக தேசிய மக்கள் சக்தி மக்களை ஏமாற்றியிருக்கிறது என்பது தெளிவாகிறது.



ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசிய கட்சியும் இணைந்து பயணிக்கவேண்டும் என்ற நிலைப்பாடு இருதரப்பிலும் காணப்படுகிறது.

ஆனால் எவ்வாறு இணைந்து செயற்படுவது தொடர்பில் பேசித் தீர்மானிக்க வேண்டியுள்ளது. இரு கட்சிகளிலும் பெரும்பாலானோர் இணைந்து செயற்படவே விரும்புகின்றனர்-என்றார். (அ)

# முன்னாள் இராஜாங்க அமைச்சரிடம் 5 கோடி ரூபா நட்டஈடு கோரி வழக்கு!

கொழும்பு, டிசெ. 03

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு எதிராக 500 இலட்சம் ரூபா நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் எப்பாவல பொஸ்பேட் நிறுவன வளாகத்தில் வழங்கல் அதிகாரியாக கடமையாற்றிய எஸ்.ஏ.அபேசிறி என்ற உத்தியோகத்தரை மற்றுமொரு நபர் தாக்கி அச்சுறுத்திய சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எப்பாவல பொஸ்பேட் நிறுவன வளாகத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் சாமர சம்பத் தசநாயக்க நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்திருந்தார்.

இதன்போது அவர், குறித்த அதிகாரியை பணிநீக்கம் செய்ய உத்தரவிட்டார்.

இந்நிலையில், சம்பவத்தை அடிப்படையாக கொண்டு அந்த அதிகாரி முன்னாள் அமைச்சருக்கு எதிராக நட்டஈடு கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

மேலும், தாக்குதல், அச்சுறுத்தல், திட்டமிட்ட பொய்க் குற்றச்சாட்டுகள் மற்றும் பொது ஊடகங்களுக்கு முன்பாக அறிக்கைகளை வெளியிட்டு நிறுவன ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் தம்மை அவதூறாகப் பேசி அவமானப்படுத்தியதாக அத்தனகல்ல மாவட்ட நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்ட அதிகாரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

அத்தோடு, அவரது நற்பெயர் மற்றும் அரசாங்க நிர்வாக அதிகாரி என்ற அவரது சுயமரியாதைக்கு பாதிப்பு ஏற்பட்டதாக தெரிவித்து 500 இலட்சம் அபராதமாக அவர் கோரியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## அரிசி உற்பத்தியாளர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 03

**அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் , கீரிச் சம்பாவின் விலை 300 ரூபாவாகவும், நாட்டரிசி 270 ரூபாவாகவும், சம்பா 290 ரூபாவாகவும் விலை போவதை தடுக்க முடியாது என ஐக்கிய அரிசி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் முதித் பெரேரா தெரிவித்தார்.**

பொலனறுவை பொங்கம பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே முதித் பெரேரா இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது சந்தையில் நாட்டு அரிசிக்கு அதிக தட்டுப்பாடு நிலவி வருவதால், கடைகளில் நாட்டு அரிசி கிடைப்பதில்லை. இதை கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யாமல் அதிகளவில் இருப்பு வைத்துள்ள அரிசியை மதிப்பிடவேண்டும். பண்டிகைக் காலங்களில் நெல்லை அரிசியாக மாற்றி நுகர்வோருக்கு குறைந்த விலையில் வழங்குவதற்கான சூழலை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

அத்துடன் விலையைக் கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்வது தீர்வாகாது. அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தி அரிசியின் தேவை மற்றும் விநியோகத்திற்கு இடம் கொடுப்பது அரிசி விவசாயிகளையும் அரிசி நுகர்வோரையும் பாதுகாப்பதற்கான அவசர வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோரின் கவனத்தை செலுத்த வேண்டும்- என்றார். (அ)

# உணவுப் பொருட்களின் விலை குறைக்கப்படும்!

## பிரதி அமைச்சர் நளின் ஹேவகே

கொழும்பு, டிசெ. 03

எரிபொருள் விலையை குறைத்தது போன்று உணவுப் பொருள் விலைகளும் குறைக்கப்படும் என பிரதி அமைச்சர் நளின் ஹேவகே தெரிவித்தார்.

காலி பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோது அவர் இந்த விடயங்களைக் கூறினார்.

எரிபொருள் விலை சிறிதளவு குறைக்கப்பட்டது போன்று எதிர்காலத்தில் உணவுப்பொருட்கள் மீதான வரிகளும் குறைக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் இவ்வாறு விலை குறைப்பு நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களும் அதிகாரபூர்வ இல்லங்களை பெற்றுக்கொள்ளாது சாதாரண வாகனங்களை பயன்படுத்துகின்றனர் என அவர் கூறினார்.

அமைச்சர்களுக்கு வாகனங்கள் இன்றிச் செயற்பட முடியாது எனவும் இதனால் சாதாரண வாகனங்கள் பயன்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய சகல மாணவருக்கும் இலவச மதிப்பெண்

## அமைச்சரவை பரிந்துரை

கொழும்பு, டிசெ. 03

2024 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் மதிப்பெண் வழங்குவதற்கு அமைச்சரவை பரிந்துரைத்துள்ளதாக சட்டமா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இந்த வினாத்தாள் பரீட்சையை மீண்டும் நடத்துவது பொருத்தமற்றது என அமைச்சரவை பரிந்துரைத்துள்ளதாகவும், இதனால் மாணவர்கள் பாதிக்கப்படலாம் எனவும் சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் வெளியானதாக கூறப்படும் மூன்று வினாக்களுக்கு முழு மதிப்பெண் வழங்க எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த மாதம் முடிவடைந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் பகுதியில் மூன்று கேள்விகள் முன்னதாகவே வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் காரணமாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்துள் ளனர்.

இந்த மனுக்களை முழு உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் விசாரிக்குமாறு கோரி சட்டமா அதிபர் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளதாகவும் சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

மனு மீதான விசாரணையை டிசெம்பர் 11 ஆம் திகதி நடத்தவும் இதன்போது உத்தரவிடப்பட்டது. (அ)

# 48ஆவது பிரதம நீதியரசராக நேற்று முர்து பெர்னாண்டோ பதவியேற்றார்!

கொழும்பு, டிசெ. 03

இலங்கையின் புதிய பிரதம நீதியரசராக, உயர்நீதிமன்ற நீதியரசர் முர்து நிருபா பிதுஷினி பெர்னாண்டோ நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.



இலங்கையின் பிரதம நீதியரசர் பதவியை வகிக்கும் இரண்டாவது பெண்ணாகவும், இலங்கையின் 48ஆவது பிரதம நீதியரசராகவும் முர்து பெர்னாண்டோ வரலாற்றில் இணைந்துள்ளார்

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய ஓய்வு பெற்றதையடுத்து வெற்றிடமான பதவிக்கு அவரது பெயர் அரசமைப்பு சபையினால் அண்மையில் அங்கீகரிக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து கொண்ட அவர் 1997 ஆம் ஆண்டு பிரதி சொலிசிட்டர் ஜெனரலாகவும் 2014 ஆம் ஆண்டு மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாகவும் பதவி உயர்வு பெற்றார்.

அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச தரப்பு சட்டத்தரணியாக இணைந்து 30 வருடங்களுக்கும் மேலாக அங்கு பணியாற்றியுள்ள முர்து பெர்னாண்டோ, 2018 மார்ச் மாதம் உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

முர்து பெர்னாண்டோ சட்டமா அதிபர் திணைக்களத்தில் சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாக கடமையாற்றியதுடன், உயர் நீதிமன்றத்தின் தற்போது பணியாற்றும் சிரேஷ்ட நீதிபதி இவராவார்.

இவர் மொறட்டுவை பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியின் பழைய மாணவியான முர்து பெர்னாண்டோ, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் சட்டத்துறை இளமாணிப் பட்டம் பெற்றுள்ளார்.

# தட்டம்மை தடுப்பூசித் திட்டத்தை 2 வாரங்களுக்கு நீடிக்க தீர்மானம்

கொழும்பு, டிசெ. 02

தட்டம்மை தடுப்பூசி திட்டத்தை மேலும் 2 வாரங்களுக்கு நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 9 ஆம் திகதி முதல் சுமார் 25,000 பேருக்கு தட்டம்மை தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக தொற்று நோய் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் அதுல லியபத்திரன தெரிவித்தார்.

தடுப்பூசி போடும் இடங்கள் குறித்த தகவல்களை தனது பகுதியில் உள்ள சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டுள்ள தட்டம்மை மீண்டும் பரவும் அபாயம் உள்ளதால் தொற்றுநோய்க்கான உடனடி பதிலளிப்புப் பிரிவு திறக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை திறந்திருக்கும் இந்த பிரிவில், தட்டம்மை உள்ளிட்ட தொற்று நோய்கள் குறித்து மக்கள் விசாரிக்க முடியும்.

011-744 65 13, 011-768 27 22, 011-768 28 72 அல்லது 011-768 26 62 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பதன் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# எதிர்கட்சிக் கட்சிகளின் உயர்பதவிகளில் மாற்றம்

கொழும்பு, டிசெ. 03

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் பொதுஜன பெரமுன உள்ளிட்ட பல எதிர்கட்சி அரசியல் கட்சிகளின் உயர்பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்த கலந்துரையாடல்கள் ஆரம்பித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் தேர்தலில் முகங்கொடுப்பதற்காக கட்சிப் பொறிமுறையை பலப்படுத்த வேண்டியிருப்பதால் எதிர்க் கட்சிகள் அனைத்தும் மறுசீரமைக்கப்படவேண்டும் என ஏற்கனவே கருத்துக்கள் எழுந்துள்ளன.

மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் இந்த நிலை மாற்றங்கள் நடைபெறுவதாகத் தெரியவந்துள்ளது.

இதற்கிடையில், எதிர்கட்சி அரசியல் கட்சிகளின் குறைபாடுகளை ஆய்வு செய்வதற்காக சிறப்பு குழுக்களை நியமிக்க அந்தந்த கட்சி தலைவர்கள் உத்தேசித்துள்ளனர்.

பொதுஜன பெரமுன கட்சியில் மேற்கொள்ளப் படவுள்ள மாற்றங்கள் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக கட்சியின் பேச்சாளர் ஒருவர் சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்கவும் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள் ளனர். (அ)

# தேங்காய் விலை உச்சம்!

கொழும்பு, டிசெ. 03


தற்போது சந்தையில் தேங்காய்க்கு தட்டுப்பாடு நிலவி வருவதால், தேங்காய் விலை 200 ரூபா வரையில் உயர்ந்துள்ளது. அரிசி மற்றும் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

சில்லறை அரிசி விற்பனைக்காக அரசாங்கம் நிர்ணயித்த கட்டுப்பாட்டு விலையை விட அரிசியின் மொத்த விலை அதிகரித்துள்ளது (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தொகை கசிப்பு, கோடாவுடன் சம்பூரில் மூவர் பொலிஸாரால் கைது

**திருகோணமலை, டிசெ. 03**
**திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனையூர் களப்புப் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையத்தை பொலிஸார் முற்று கையிட்டு மூவரை கைது செய்தனர்.**



சம்பூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஷார தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்தச் சுற்றி வளைப்பை மேற் கொண்டனர்.

இதன்போது, 32 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு, 5 இலட்சத்து 44 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா, தோணி ஒன்றையும் பொலிஸார் பறிமுதல் செய்த னர்.

அத்தோடு, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாக 35, 37, 43 வயதுகளையுடைய மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்ததாக சம்பூர் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் சம்பூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் இவர்களை மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# பொத்துவில் கிராமத்தில் காட்டு யானை அட்டகாசம்

## அச்சத்தில் உறைந்துள்ள மக்கள்



பொத்துவில், டிசெ. 03

அம்பாறை பொத்துவில் றொட்டைக் கிராமத்தில் யானை ஒன்று குடியிருப்புகளை சேதப்படுத்தியுள்ளது. வீடொன்றுக்குள் நுழைந்த யானை, உடைமைகளுக்குச் சேதம் ஏற்படுத்தியதோடு, வீட்டின் மதிலையும் சேதப்படுத்தியது.

இக்கிராமத்தில் வாழ்கின்ற மக்கள், மீன் பிடித்தொழிலை வாழ்வாதாரமாக கொண்டவர்கள். யானை தாக்குதல்களால் அச்சம் கொண்டுள்ளதுடன் தமது வாழ்வாதாரத்தையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் தலையிட்டு, காட்டு யானைகளால் ஏற்படுத்தப்படும் அழிவுகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டு. இராமகிருஷ்ண மிஷனால் உதவிகள்



மட்டக்களப்பு, டிசெ. 03

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனால் சமைத்த உணவு பொதிகள் மற் றும் உலருணவுப் பொதி கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அமிர்தகழி, பெரிய உப்போடை திருப்பெருந்துறை திராய்மடு ஆகிய பிரதேசங்களில் 900 குடும்பங்களுக்கு இவ்வாறு சமைத்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மேலும் செட்டிபாளயத்தில் 50 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சிறீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் இப் பிரதேசங்களுக்கு சென்று மக்களுக்கு உதவிகளை வழங்கினார்.

சில பிரதேசங்களுக்கு இயந்திரப்படகு மூலம் கொண்டு சென்று உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் இல்ல மாணவர்கள் மற்றும் தொண்டர்கள் இப் பணியில் இணைந்து ஒத்துழைப்பு வழங்கினர்.(எ)

# நீர்க்குழாய் திருத்த வேலைகள் தீவிரம் விரைவில் குடிநீர் விநியோகம் சீராகும்



காரைதீவு, டிசெ. 01

அம்பாறை மாவட்டத்தில் பாரிய நீர்க்குழாய் சேதமான நயினாகாடு வடசேரிக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். உதுமாலெவ்வை அங்கு இடம்பெற்றுவரும் திருத்த வேலைகளை பார்வையிட்டார்.

இதன்போது அவர்தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் ஹைதர் அலி, பொறியியல் பிரிவு பொறியியலாளர் தாமோதரம் விநாயகமூர்த்தி, இயக்கமும் பராமரிப்பும் பிரிவுக்கான பொறியியலாளர் பாக்கியராஜா மயூரதன், சம்மாந்துறை பிரதேச பொறியியலாளர் வேல்கஜன்,காரைதீவு பிரதேச காரியாலய பொறுப்பதிகாரி, பொறியியலாளர் விஜயரெத்தினம் விஜயசாந்தன் ஆகியோரைச் சந்தித்து நிலவரங்களை கேட்டறிந்தார்.

நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க எக்ஸ்கவேற்றர் இயந்திரமொன்றை அம்பாறை நீர்ப்பாசனப் பொறியியலாளர் இடமிருந்து பெற்றுக் கொடுத்துள்ளார்.

அத்தோடு, மக்களுக்கு விரைவாக குடிநீர் வழங்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உயரதிகாரிகளை தொடர்பு கொண்டு உதுமாலெவ்வை எம். பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

"மிகுந்த சிரமத்தின் மத்தியில் தான் இங்கு வர முடிந்தது. உண்மையில் காரைதீவு, நிந்தவூர், மாளிகைக்காடு, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 72, 000 மக்கள் தண்ணீர் இன்றி தவிப்பதை அறிந்துதான் இங்கு வந்து பார்த்தேன்.

அவர்கள் எக்ஸ்கவேற்றர் இயந்திரமொன்றை கேட்டார்கள். அதைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றேன். மிக விரைவாக மக்களுக்கு குடிநீர் கிடைக்கும்"- என்றார் உதுமாலெவ்வை எம். பி.

இந்த நீர்க்குழாய் சேதமடைந்ததால் கடந்த 7 நாட்களாக காரைதீவு பிரதேசத்துக்கு குடிநீர் வழங்கப்படவில்லை. (எ)

# பொலிவேரியன் மக்களுக்கு குடிநீர் விநியோகம் ஆரம்பம்



கல்முனை, டிசெ. 02

வெள்ள அனர்த்தம் காரணமாக குடிநீர் விநியோகம் தடைப்பட்டிருந்த சாய்ந்தமருது, பொலிவேரியன் கிராமத்திலுள்ள மக்களுக்கு கல்முனை மாநகர சபையால் பௌஸர் மூலம் வீட்டுக்கு வீடு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவின் துரித முயற்சியால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வெள்ள அனர்த்தத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட பொலிவேரியன் கிராமத்துக்கு சென்று மக்களைச் சந்தித்து அவர்களது அவசர தேவைகள் குறித்து கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது, கடந்த சில நாட்களாக குடிநீர் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டிருப்பதால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் குறிப்பிட்டனர். இதற்குரிய ஏற்பாட்டை உடனடியாக செய்து தருமாறும் கேட்டுக் கொண்டனர்.

இதையடுத்து கல்முனை மாநகர சபை ஆணையாளர் என். எம். நௌபீஸுடன் தொடர்பு கொண்ட ஆதம் பாவா எம்.பி, இப்பிரச்னை குறித்து கலந்துரையாடியதுடன் அவர்களது ஆலோசனையின் பிரகாரம் அம்பாறை மாவட்ட செயலகத்துடன் உடனடியாக தொடர்பு கொண்டு - தண்ணீர் பௌஸர் ஒன்ற வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

அவரது கோரிக்கைக்கு அமைவாக கிடைக்கப் பெற்ற தண்ணீர் பௌஸரை பொறுப்பேற்ற கல்முனை மாநகர சபை துரிதமாக செயல்பட்டு பொலிவேரியன் கிராமத்திலுள்ள மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்து வருகின்றது.

கல்முனை மாநகர ஆணையாளரின் அறிவுறுத்தலின் பேரில் பொறியியலாளர் ஏ. ஜே. ஏ. எச். ஜௌசி மற்றும் பிரதேச செயலாளர் ஏ.எம். ஆஷிக் ஆகியோரின் கண்காணிப்பில் இப்பணி முன்னெடுக்கப்படுகிறது. (ஏ)

# சர்வதேச எய்ட்ஸ் தின விழிப்புணர்வு ஊர்வலம்



மட்டக்களப்பு, டிசெ. 03

சர்வதேச எய்ட்ஸ்தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற் பாட்டில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் முரளீஸ்வ ரன் தலைமையில் நேற்று முன் தினம் காலை இந்த விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

காந்தி பூங்காவில் இருந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமாகி மட்டக்களப்பு நகர் சுற்றுவட்டம், பேருந்து நிலையம், திருமலை வீதி ஊடாக மட்டக்களப்பு பொதுச்சந்தைக்கு சென்று மீண்டும் திருமலை வீதியூடாக தாண்டவன்வெளி வரையில் சென்று அங்கிருந்து பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் வரையில் ஊர்வலம் நடைபெற்றது.

இதன் போது, எச். ஐ. வி. தொற்று தொடர்பான அறிவித்தல்கள் வழங்கப்பட்டதுடன் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளும் நடைபெற்றன. எச். ஐ. வி., எயிட்ஸ் தொடர்பான பல்வேறு விளக்கங்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் உலக எய்ட்ஸ் தினத்தை குறிக்கும் வகையில் பாதுகாப்பான பாலியல் உறவு மூலம் எச். ஐ. வி., எயிட்ஸ் நோயை தடுப்போம் என்னும் ஸ்டிக்கர்கள் முக்கிய இடங்களிலும் பேருந்துகளிலும் ஓட்டோக்களிலும் ஒட்டப்பட்டன.

இதில், மட்டக்களப்பு தாதியர் கல்லூரி மாணவர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர், மருத்துவர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொலருக்கு எதிராக செயல்பட்டால் பிரிக்ஸ் நாடுகளுக்கு 100 சதவீத வரி

## டொனால்ட் ட்ரம்ப் கடும் எச்சரிக்கை



வாஷிங்டன், டிசெ. 03

**சர்வதேச வர்த்தகத்தில் அமெரிக்க டொலருக்கு மாற்றாக புதிய நாணயங்களை கொண்டுவர திட்டமிட்டால் பிரிக்ஸ் நாடுகளின் மீது 100 சதவீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்காவில் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா இவற்றுடன் இணைந்து புதிய உறுப்பினர்களாக ஈரான், எகிப்து, எதியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகமும் பிரிக்ஸ் கூட்டணியில் இடம்பெற்றுள்ளது. இந்த நாடுகளின் கூட்டணி அமெரிக்க டொலருக்கு மாற்றாக புதிய பிரிக்ஸ் நாணயத்தை உருவாக்கவோ அல்லது ஏதாவது ஒரு நாணயத்தை மாற்றாக கொண்டுவர மாட்டோம் என்ற உறுதிமொழியை அமெரிக்காவுக்கு வழங்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை என்றால் பிரிக்ஸ் கூட்டணி மற்றும் அதற்கு ஆதரவளிக்கும் நாடுகள் 100 சதவீதம் வரி விதிப்பை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

டொலருக்கு மாற்றான நாணயத்தை கொண்டு வரும் நடவடிக்கையில் ஈடுபட்டால் பிரிக்ஸ் நாடுகள் அமெரிக்க பொருளாதாரத்தை அணுகும் வாய்ப்பை இழக்க நேரிடும். அவர்கள் அனைவரும் தங்களது பொருட்கள் அல்லது தயாரிப்புகளை அற்புதமான அமெரிக்க பொருளாதாரத்தில் விற்பனை செய்வதற்கு குட்பை சொல்ல நேரிடும்.

சர்வதேச வர்த்தகத்தில் டொலருக்கு மாற்றாக வேறு ஒரு நாணயத்தை உருவாக்கும் பிரிக்ஸ் நாடுகளின் நோக்கம் ஒருபோதும் வெற்றி பெறாது. அவ்வாறு செய்யும் நாடுகளுக்கு அமெரிக்க பொருளாதாரத்தில் நிச்சயம் இடமில்லை என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவின் கசான் நகரில் பிரிக்ஸ் கூட்டணி நாடுகளின் உச்சி மாநாடு அண்மையில் நடைபெற்றது. இந்த உச்சி மாநாட்டில், அமெரிக்க டொலர் அல்லாத பரிவர்த் தனையை ஊக்குவிக்கவும், உள்ளூர் நாணயங்களை வலுப்படுத்தவும் பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் முக்கிய ஆலோசனை நடத்தின. இதன்போது, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கூறுகையில், "டொலரை ஆயுத மாக்கி நம்மை செயல்பட விடாமல் அமெரிக்கா தடுக்கிறது. இதனால், மாற்று வழிமு றையை தேட வேண்டிய கட் டாயத்துக்கு தள்ளப் பட்டுள்ளோம்"-என்றார். (எ)

# உதைபந்தாட்ட போட்டியில் திடீரென வெடித்த மோதல்!

## கினியாவில் 100 பேர் உயிரிழப்பு

கோனாக்ரி, டிசெ. 03

கினியாவில் உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு இடையே திடீரென ஏற்பட்ட மோதலால் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

அந்த நாட்டின் இரண்டாவது பெரிய நகரான என்சரிகோரில் உள்ளூர் அணிகளுக்கு இடையே உதைபந்தாட்ட போட்டி ஒன்று நடைபெற்றது. இந்தப் போட்டியை பல்லாயிரத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் நேரில் கண்டுகளித்தனர். இதன்போது, போட்டியின்போது நடுவர் சர்ச்சையான தீர்ப்பு வழங்கியதாக கூறப்படுகிறது.

இதனால் ஒரு தரப்பு ரசிகர்கள் ஆத்திரமடைந்து மைதானத்தை ஆக்கிரமித்தனர். அடுத்து மற்றொரு தரப்பினரும் மைதானத்துக்குள் நுழைந்து ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர். இந்த மோதல் ஒரு கட்டத்தில் வன்முறையாக வெடித்தது. மைதானம் மட்டுமின்றி, வெளியிலும், வீதிகளிலும் ரசிகர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர். அத்துடன், மைதானம் அருகேயுள்ள பொலிஸ் நிலையத்துக்குத் தீ வைக்கப்பட்டது. இந்த வன்முறைச் சம்பவத்தால் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மருத்துவர் ஒருவர் கூறுகையில், "மருத்துவ மனையில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை சடலங்கள் வரிசையாவுள்ளன. பிரேத அறை நிரம்பியுள்ளது. சுமார் 100 பேர் உயிரிழந்தனர். -என்றார். உதைபந்தாட்ட போட்டியின் போது ரசிகர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலால் நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியான சம்பவம், அந்த நாட்டில் பதற்றமான சூழலை உருவாக்கி யுள்ளது. (எ)

# பாகிஸ்தானில் வன்முறைகளால் 130 பேர் பலி, 200 பேர் படுகாயம்

இஸ்லாமாபாத், டிசெ. 03

பாகிஸ்தானில் இரு பிரிவினர் இடையே நீடித்து வரும் வன்முறை - மோதல்களால் 130 பேர் பலியாகினர், 200 பேர் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைபர் பக்துங்வா மாகாணத்தில் ஒரு சமூகத்தை சேர்ந்த இரு பிரிவினர் இடையே நீண்ட காலமாக மோதல் போக்கு நீடித்து வருகிறது. இந்தச் சூழலில் கடந்த மாதம் 21ஆம் திகதி கைபர் பக்துங்வாவின் குர்ராம் மாவட்டத்தில் ஒரு பிரிவினர் சென்ற வாகனங்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 57 பேர் கொல்லப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து மாவட்டம் முழுவதும் இரு பிரிவினருக்கும் இடையே பயங்கர மோதல்கள் வெடித்தன. இதில் இரு தரப்பிலும் ஏராளமானோர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து, இரு தரப்புக்கும் இடையே நடந்த இணக்க பேச்சுகள் மூலம் 10 நாட்கள் சண்டை நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அதை மீறியும் தொடர்ந்து வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

நேற்று முன்தினம் இரு பிரிவினருக்கும் இடையே நடந்த மோதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். இதன் மூலம் பலி எண்ணிக்கை 130 ஆக அதிகரிதத்து. படுகாயமடைந்தவர்களின் எண்ணிக்கை 200ஐ நெருங்கியுள்ளது. (எ)

# தாய்வானுக்கு அமெரிக்கா ஆயுதங்கள் விற்கக்கூடாது

## சீன வெளிவிவகார அமைச்சு மிரட்டல்

பிஜிங், டிசெ. 03

தாய்வானுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்த அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

தாய்வானுக்கு சுதந்திரம் கேட்கும் பிரிவினைவாத சக்திகளை தூண்டுவதையும் ஆதரிப்பதையும் அமெரிக்கா உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க ஆயுத விற்பனையின் அடுத்த கட்டமாக, 385 மில்லியன் டொலர் மதிப்பிலான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. ஆயுத விற்பனைக்கு அமெரிக்க வெளிவிவகாரத் துறை ஒப்புதல் வழங்கியது. இதன்படி போர் விமானங்கள் மற்றும் ரேடார் அமைப்புகளுக்கான உதிரிப் பாகங்கள் ஆகியவை அடுத்த ஆண்டு முதல் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நடவடிக்கைக்கு சீனா கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்தவை வருமாறு,சீனாவின் தாய்வான் பிராந்தியத்துக்கு அமெரிக்கா ஆயுத விற்பனை செய்வது, ஒரே ஒரு சீனா என்ற கொள்கை, சீனா - அமெரிக்க கூட்டறிக்கைகள், சீனாவின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பு நலன்களை கடுமையாக மீறும் செயலாகும். சர்வதேச சட்டத்தையும் கடுமையாக மீறுவதாகும்.

ஆயுத விற்பனையானது தாய்வான் பிரிவினைவாத சக்திகளுக்கு மிகவும் தவறான சமிஞ்யை அனுப்புகிறது. இதனால் தாய்வான் நீரிணை முழுவதும் சீனா - அமெரிக்க உறவுகள், அமைதி மற்றும் ஸ்திரத் தன்மைக்கு தீங்கு விளைவிக்கும்.

நாட்டின் இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்க சீனா பதிலடி நடவடிக்கைகளை எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### எவ். பி. ஐ. இயக்குநராக ஹேஷ்யப்

வாஷிங்டன், டிசெ. 03

அமெரிக்க புலனாய்வு அமைப்பான எவ். பி. ஐ. இயக்குநராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பென்டகன் அதிகாரி ஹேஷ்யப் பட்டேலை அமெரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் நியமனம் செய்துள்ளார்.

இது குறித்து ட்ரம்ப் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஹேஷ்யப் ஒரு சிறந்த சட்டத்தரணி மற்றும் புலனாய்வு அதிகாரி ஆவார். அமெரிக்காவுக்கு முன்னுரிமை என்பதை தனது கொள்கையாக கொண்ட அவர், ஊழலை எதிர்த்தும், நீதியை காக்கவும், அமெரிக்க மக்களை பாதுகாக்கவும் உழைத்து வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளர். (எ)

# எதிர்க்கட்சிகளின் அமளியால் பாராளுமன்றம் ஒத்திவைப்பு!

புதுடில்லி, டிசெ. 03

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தொடர் அமளியால் பாராளுமன்ற இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன.

இந்தியப் பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த 25ஆம் திகதி தொடங்கியது. அப்போது, அதானி விவகாரம், மணிப்பூர் வன்முறை, உத்தர பிரதேசம் சம்பாவில் அண்மையில் வெடித்த கலவரம் என்பன குறித்து விவாதிக்கக்கோரி எதிர்க்கட்சியினர் கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனால் மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகிய இரு அவைகளும் முடங்கின.

பாராளுமன்றத்தில் குளிர்கால கூட்டத்தொடர் தொடங்கியதில் இருந்து இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் நேற்றுக் காலை 11 மணிக்கு பாராளுமன்றத்தின் இரு அவைகளும் கூடியது. அப்போது, அதானி விவகாரம், வக்பு வாரிய சட்டத் திருத்தம், மணிப்பூர் வன்முறை உள்ளிட்ட பிரச்னைகளை முன்வைத்து மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து மக்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக அவைத் தலைவர் ஓம் பிர்லா அறிவித்தார். இதேபோன்று, மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் அவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக அவைத் தலைவர் ஜகதீப் தன்கர் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் இரு அவைகளும் மீண்டும் தொடங்கிய போது, எதிர்க்கட்சிகள் உறுப்பினர்கள் மீண்டும் கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனைத்தொடர்ந்து பாராளுமன்ற இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதனிடையே தமிழகத்தில் பெங்கல் புயல் பாதிப்பு குறித்து விவாதிக்கக் கோரி மக்களவையில் தி. மு. க. எம்.பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். (எ)

### அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு

வாஷிங்டன், டிசெ. 03


அமெரிக்காவில் கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.வாஷிங்டன், ஓகியோ, மிக்சிகன் உள்ளிட்ட மாகாணங்களில் 61 சென்ரி மீற்றர் அளவுக்கு பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கடந்த மாதத்தில் இருந்து குளிர்காலம் தொடங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து அங்கு கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக அந்த நாட்டின் மேற்கு மாகாணங்களான வாஷிங்டன், பென்சில்வேனியா உள்ளிட்டவற்றில் வழக்கத்தை விடவும் அதிகமாக குளிர் வீசிபனிப்பொழிவு அதிகரித்து காணப்படுகிறது.

இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கு பாடசாலைகள், கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இங்கிலாந்து புதிய சாதனை




கிறிஸ்ட்சர்ச், டிசெ. 03

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இங்கிலாந்து அணி மாபெரும் உலக சாதனை படைத்துள்ளது.

இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கிறிஸ்ட்சர்ச்சில் உள்ள ஹாக்லே ஓவல் மைதானத்தில் கடந்த 28ஆம் திகதி தொடங்கியது. இதில் முதல் இன்னிங்ஸில் முறையே நியூசிலாந்து 348 ஓட்டங்களும், இங்கிலாந்து 499 ஓட்டங்களும் எடுத்தன.

இதனையடுத்து 151 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய நியூசிலாந்து 74. 1 ஓவர்களில் 254 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக டேரில் மிட்செல் 84 ஓட்டங்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் பிரைடன் கார்ஸ் 6 விக்கெட்களும், கிறிஸ் வோக்ஸ் 3 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதன் மூலம் இங்கிலாந்துக்கு 104 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணி அதிரடியாக விளையாடியது. வெறும் 12. 4 ஓவர்களில் 2 விக்கெட்கள் மாத்திரம் இழந்து 104 ஓட்டங்கள் சேர்த்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதன் மூலம் 147 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 100 ஓட்டங்களுக்கு அதிக இலக்கை குறைந்த ஓவர்களில் எட்டிய அணி என்ற மாபெரும் உலக சாதனையை இங்கிலாந்து அணி படைத்தது. இதற்கு முன்னர் பங்களாதேஷுக்கு எதிராக நியூசிலாந்து 18. 4 ஓவர்களில் இலக்கை எட்டியதே சாதனையாக இருந்தது.

அந்தப் பட்டியல் வருமாறு,

1. இங்கிலாந்து - 12. 4 ஓவர்கள்,
2. நியூசிலாந்து - 18. 4 ஓவர்கள்,
3. மேற்கு இந்திய தீவுகள் - 19. 0 ஓவர்கள்,
4. மேற்கு இந்திய தீவுகள் - 19. 3 ஓவர்கள்
5. தென்னாபிரிக்கா - 19. 5 ஓவர்களில் 100 இற்கும் மேற்பட்ட ஓட்ட எண்ணிக்கையை எட்டி வெற்றி பெற்றது.

(எ)

## சையத் மோடி பட்மிண்டன் சம்பியனானார் பி. வி. சிந்து



லக்னோ, டிசெ. 03

சையத் மோடி சர்வதேச பட்மிண்டன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் பி. வி. சிந்து, ஆடவர் பிரிவில் லக்சயா சென் ஆகியோர் சம்பியன் பட்டம் வென்றனர்.

இந்தியாவின் லக்னோவில் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் பி. வி. சிந்து 21 - 14, 21 - 16 என்ற செட் கணக்கில் சீன வீராங்கனை வூ லுவோ யூவை வீழ்த்தி பட்டம் வென்றார்.

கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற சிங்கப்பூர் ஓபன் பட்மிண்டன் போட்டியில் கடைசியாக சிந்து சம்பியன் பட்டம் வென்றிருந்தார்.

ஆடவர் பிரிவில் இந்திய வீரர் லக்சயா சென் 21 - 6, 21 - 7 என்ற செட் கணக்கில் சிங்கப்பூர் வீரர் ஜியா ஹெங் ஜேசனை தோற்கடித்து பட்டத்தை கைப்பற்றினார்.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் ட்ரீசா ஜாலி, காயத்ரி கோபிசந்த் ஜோடி 21 - 18, 21 - 11 என்ற செட் கணக்கில் சீனாவின் பாவோ லி ஜிங், லி கியான் ஜோடியை வென்று சம்பியன் பட்டத்தை வசப்படுத்தியது.

ஆனால், ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதிச் சுற்றில் இந்தியாவின் பிருத்வி கிருஷ்ணமூர்த்தி ராய், சாய் பிரதீக் ஜோடி 14 - 21, 21 - 19, 17 - 21 என்ற செட் கணக்கில் சீனாவின் ஹவாங் டி, லியி யாங் ஜோடியிடம் தோல்வியடைந்தது.

(எ)



## “அஸ்வின் - ஜடேஜாவுக்கு மாற்றாக யாரும் இல்லை”

சிட்னி, டிசெ. 03

இந்திய அணியில் அஸ்வின் மற்றும் ஜடேஜா ஜோடிக்கு மாற்றாக யாரும் இல்லை என்று துடுப்பாட்ட வீரர் புஜாரா தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட தொடரில் விளையாடி வருகிறது.

முன்னதாக பேர்த்தில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்திய அணியில் அஸ்வின் - ஜடேஜா இடம் பெறாதது அனைவருக்கும் ஆச்சரியமாக அமைந்தது. ஏனெனில் ஐ. சி. சி. டெஸ்ட் சகல துறை வீரர்கள் தரவரிசையில் முதல் 2 இடங்களில் இருக்கும் இவர்களுக்கு பதிலாக வாஷிங்டன் சுந்தர் மற்றும் நிதிஷ் ரெட்டி ஆகியோர் இந்திய அணியில் இடம் பிடித்தனர். இருப்பினும் இந்திய அணி வெற்றி பெற்றது.

இந்த நிலையில் இந்தியாவில் அஸ்வின் மற்றும் ஜடேஜா ஜோடிக்கு மாற்று இல்லை என்று புஜாரா பாராட்டியுள்ளார். இது பற்றி அவர் கூறியவை வருமாறு, “அஸ்வின் மற்றும் ஜடேஜா ஆகியோருடைய தரத்தை கொண்ட வீரர்கள் உங்களுக்கு கிடைக்க மாட்டார்கள். உள்ளூரில் நான் நிறைய சுழற்பந்து வீச்சாளர்களை பார்த்துள்ளேன். ஆனால், அவர்களுக்கான (அஸ்வின் - ஜடேஜா) மாற்று வீரர்கள் உண்மையில் நம்மிடம் இல்லை என்பதே என்னுடைய கருத்து. நாம் வளர்க்க வேண்டிய சில திறமையான வீரர்கள் நம்மிடம் உள்ளார்கள்.

ஆனால் அவர்கள் நம்முடைய ஜாம்பவான்கள். அஸ்வின் அல்லது ஜடேஜா போன்றவர்கள் உங்களுக்கு கிடைப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. இன்னும் அவர்கள் இந்திய கிரிக்கெட் அணிக்கு நிறைய பங்காற்ற முடியும் என்று நான் கருதுகிறேன். 2025 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குப் பின் நாம் இங்கிலாந்தில் முக்கியமான தொடரில் விளையாடவுள்ளோம். அங்கே அஸ்வின் மற்றும் ஜடேஜா ஜோடியாக விளையாட முடியுமா? என்பதை நீங்கள் பார்க்க வேண்டும்”- என்றார்.

(எ)

# இந்தியாவை வீழ்த்த பும்ராவை நாம் எதிர்கொண்டால் போதும்

### ஆஸி வீரர் ட்ராவிஸ் ஹெட் சொல்கிறார்

அடிலெய்ட், டிசெ. 03

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற ஜஸ்பிரீத் பும்ராவை எதிர் கொண்டால் போதும் என்று அவுஸ்திரேலியாவின் துடுப்பாட்ட வீரர் ட்ராவிஸ் ஹெட் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா 295 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி எதிர்வரும் 6ஆம் திகதி அடிலெய்ட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடருக்கு முன்னதாக இந்தியாவை வெள்ளையடிப்பு செய்வோம் என்று அந்த அணியின் தலைவர் பட் கம்மின்ஸ், பந்து வீச்சாளர் நாதன் லயன் உள்ளிட்ட வீரர்கள் சவால் விடுத்தனர். அவர்களுக்கு இந்தியா முதல் போட்டியிலேயே சரியான பதிலடி கொடுத்துள்ளது. இதன் காரணமாக அவுஸ்திரேலிய அணியில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் விமர்சித்து வருகின்றன.

இந்த நிலையில் முதல் போட்டியில் இந்திய அணி தாங்கள் எதிர்பாராத நேரத்தில் அடித்து தோல்வியை கொடுத்ததாக ட்ராவிஸ் ஹெட் தெரிவித்துள்ளார். எனவே, 2ஆவது போட்டியில் பெரிய மாற்றங்களை செய்யாமல் தங்களுடைய அடிப்படை திட்டத்தை பின்பற்றி புத்துணர்ச்சியுடன் விளையாடினாலே இந்தியாவை வீழ்த்த முடியும் என்று அவர் நம்பிக்கை




வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், “பந்தை பார்த்து புத்துணர்ச்சியுடன் விளையாடுவதற்குத் தயாராக இருக்கும்போது நான் சிறந்தவன். பும்ராவை இதற்கு முன் சில முறை நான் சந்தித்தது அதிர்ஷ்டம் என்று நினைக்கிறேன். சமீப காலங்களைப் போன்று அவரை மீண்டும் நன்றாக எதிர்கொண்டால் போதும்.

முதல் போட்டியில் நாங்கள் சந்தித்த தோல்வி கடின காலங்களில் இருந்து மீண்டு வருவதற்கு தேவைப்படுவதை போன்ற ஒன்றாகும். அதே சமயம் நாங்கள் அந்தப் போட்டியில் அதிகப்படியாக தோற்கடிக்கப்பட்டோம். எனவே, அந்தத் தோல்விக்கு எது காரணம் என்று உணர்வது எங்களுக்கு மிகவும் எளிது. அதைப் புரிந்து கொண்டு தற்போது நாங்கள் 3 - 4 நாட்கள் அதிலிருந்து மீண்டு வருவதற்கான பயிற்சிகளை எடுப்பதில் உறுதியாக இருக்கிறோம். அது மிகப்பெரிய மாற்றமாக இருக்காது. அடுத்த போட்டியில் என்ன சவால்கள் இருக்கும் என்பதை தெரிந்து கொண்டு கொஞ்சம் உற்சாகத்துடன் நன்றாக விளையாடுவதற்காக முயற்சிக்க வேண்டும்”- என்றார்.

(எ)

# ஐ. சி. சி. புதிய தலைவராக ஜெய் ஷா பொறுப்பேற்பு




துபாய், டிசெ. 03

சர்வதேச கிரிக்கெட் பேரவை யின் ஐ. சி. சி. புதிய தலைவராக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பி. சி. சி. ஐ) செயலா ளர் ஜெய் ஷா பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த 5 ஆண்டுகளாக பி. சி. சி. ஐ. செயலாளராக ஜெய் ஷா செயல் பட்டு வருகிறார். இந்த நிலையில் ஐ. சி. சியின் தலைவர் பொறுப்பி லிருந்த கிரெக் பார்க்லே மூன்றாவது முறையாக ஐ. சி. சியின் தலைவராக பொறுப்பைத் தொடர்வதற்கு விருப்பம் இல்லை என்று தெரிவித் துவிட்டார்.

இதனையடுத்து, சர்வதேச கிரிக்கெட் பேரவையின் புதிய தலைவராக ஜெய் ஷா தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் ஐ. சி. சியின் தலைவராக பொறுப்பேற்றுள்ள 5ஆவது இந்தியர் என்ற பெரு மையை ஜெய் ஷா பெற்றுள்ளார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனவர்களின்...

அரசாங்கத்தினூடாக பெற்றுக் கொடுப்பதாக அவர் உறுதியளித்தார்.

இதன்போது விநாயகபுரம் மீனவர்களினால் மகஜர் ஒன்றும் கடல்தொழில் பிரதி அமைச்சர் ரி.ஜி.ரத்னகமகேவிடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மாகாண சபை...

மாகாண சபையை அகற்றுவது பற்றி தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கூறப்பட்டதாக தெரியவில்லை. ஒருவேளை, வட மாகாண மாவட்டங்களில் தமிழ் மக்களின் வாக்குகள் பெரும்பான்மையாக கிடைத்துள்ளமையால், மாகாணசபை என்பதை நாம் ஏற்க மாட்டோம் என்ற பழைய ஜேவிபியின் கொள்கை நிலைபாட்டை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டு அதை அகற்ற ஆணை தந்துள்ளார்கள் என தேசிய மக்கள் சக்தி நினைக்கிறதோ என தெரியவில்லை என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளதாவது-

சம உரிமை வருவது நல்லதே. ஆனால், சுலபமான காரியம் அல்ல. இன, மத, மொழி ரீதியாக சம உரிமைகள் இந்நாட்டில் உறுதி படுத்த இன்னமும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும். இங்கே இன்று அரசியலமைப்பிலேயே, இந்நாட்டின் மொழிகள், மதங்கள் மத்தியில் சம உரிமை உறுதிபடுத்தப்பட வில்லை. அரச மதமான பௌத்த மதத்துடன் பௌத்த தேரர்கள், இந்நாட்டின் அதிகார மையத்தில் இருக்கிறார்கள். மொழி தொடர்பில் சில பலவீனமான சட்டங்கள் ஆங்காங்கே இருந்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்த இந்நாட்டின் அரச அதிகார வர்க்கம் இடம் கொடுப்பதில்லை. மொழிகள் மத்தியில் சம உரிமையை அமுல் செய்ய படாத பாடு பட்ட எனக்கு இது நன்கு தெரியும்.

சம உரிமை என்பது வானத்தில் பறக்கும் அழகான பறவை. மாகாண சபை என்பது கையில் இருக்கும் பறவை. வானத்தில் பறக்கும் அழகான பறவையை பற்றி கனவு கண்டுக்கொண்டு கையில் இருக்கும் பறவையை விட்டு விட சொல்கின்றனவா, ஜேவிபியும், தேசிய மக்கள் சக்தியும் என கேட்க விரும்புகிறேன்.

சிங்கப்பூர் சிறிய நிலபரப்பு கொண்ட ஒரு நாடு. ஆகவே அங்கே மாகாணங்களை அமைத்து அதிகார பகிர்வு செய்ய முடியாது. ஆனாலும், அங்கேயும், ஜனாதிபதி பதவி என வரும்போது சீனர், தமிழர், மலாய் என மூன்று இனத்தவர்களும் மாறி மாறி பதவி வகிக்கும் முறையில் அரசியல் சட்டம் இருக்கிறது. அவர்களது அமைச்சரவையில் எல்லா சிங்கப்பூர் இனத்தவரும் இடம் பெறுகிறார்கள்.

நல்லாட்சியின் போது, புதிய அரசியலைமைப்பு உருவாக்கும் முயற்சி நடந்து. அதற்கான வழிகாட்டல் குழுவில் இன்றைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அங்கத்துவம் பெற்று பணியாற்றினார். நானும் வழிகாட்டல் குழுவில் இடம் பெற்றேன். இன்னமும் பல இன, மத, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வழிகாட்டல் குழுவில் அங்கத்துவம் வகித்தார்கள்.

ஆகவே அத்தகைய புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் போது, இவை பற்றி சிநேகபூர்வகமாக கலந்து பேசி, வாத, விவாதம் செய்து, தீர்மானங்களுக்கு வரலாம். ஆனால், இப்போதே அவசரப்பட்டு, மாகாணசபையை அகற்றியே தீருவோம். அது ஜே.வி.பியின் கொள்கை. அது மாறவில்லை. ஜே.வி.பியும், தேசிய மக்கள் சக்தியும் ஒன்றுதான் என ஒருதலைபட்சமாக ஜேவிபியின் பொது செயலாளர் நண்பர் ரில்வின் சில்வா கூறுவது ஏற்புடையதல்ல-என்றார். (அ)

## வட்டி...

புதிய பணம் அச்சிடுதல் மற்றும் பணவீக்கம் தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், வட்டி விகிதங்களை நிலையானதாக வைத்திருக்க தேவையான பணத்தை மத்திய வங்கி வெளியிடுவதாக சுட்டிக்காட்டினார்.

மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம், மத்திய வங்கிக்கு நேரடியாகப் பணத்தை அச்சிடும் திறன் இல்லை எனத் தெரிவித்த மத்திய வங்கியின் ஆளுநர், நாளாந்தம் நிலையான பணப் புழக்கத்தை பேணுவதற்கு தேவையான பணத்தை மத்திய வங்கி வெளியிடும் என்றும் தெரிவித்தார். (அ)

## ரில்வினின்...

ஆகவே ஒரு யாப்பை நடைமுறைப் படுத்த வேண்டிய பொறுப்பு அந்த அரசாங்கங்களையே சார்ந்ததாகும்.

13ஆவது திருத்தச் சட்டம் தமிழர்களான எமக்கு ஒரு தீர்வாக இல்லாவிட்டாலும் இரண்டு நாடுகள் முன் நின்று செயல்படுத்தியது என்கின்ற ஒரு காரணத்தினால் அது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையிலேயே அநுராகுமாரவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று கூறி இருக்கின்றார். அது மாத்திரமின்றி தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வை கொண்டு வருவதற்கு எங்களுடைய அரசாங்கம் அரசியல் யாப்பை மாற்றத்தின் ஊடாக கொண்டுவரும் என்றும் கூறி இருக்கின்றார்.

ஆகவே 13ஆவது திருத்தச் சட்டம் நமக்கான ஒரு தீர்வாக இல்லை என்பதை வெளிப்படுத்திய அவர் தமிழர்களுக்கான நிரந்தர தீர்வை வழங்க அதனை நடைமுறைப்படுத்த புதிய அரசியல் அமைப்பினூடாகவும் தீர்வை வழங்குவோம் எனவும் தெரிவித்திருந்தார்.

ஆகவே அநுரகுமாரவின் அரசாங்கம் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். இந்த விடயம் அவர்களுடைய வாக்குறுதி மாத்திரமல்ல அரசியல் யாப்பிலும் உள்ளடக்கப்பட்ட ஒரு விடயமாகவே இருக்கின்றது.

ஆகவே இந்த நாட்டில் எல்லா மக்களும் ஒரே மாதிரியாக வாழ்வதில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

எல்லோரும் சமமாக நடத்தப்படுவார்களானால் அது எங்களுக்கும் சந்தோஷமான விடயம் தான்.

ஆனால் இலங்கையின் ஒரு தேசிய இனமான தமிழரகளின் கோரிக்கைகளுக்கு அரசாங்கங்கள் செவிசாய்க்க வேண்டும்.

எங்களுடைய கட்சியின் நிலைப்பாடு ஒன்றிணைந்த நாட்டிற்குள் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் தங்களை தாங்களே ஆழக்கூடிய ஒரு அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதேயாகும். இதுவே தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பமும்.

ஆகவே இந்த அரசாங்கம் கடந்த கால அரசாங்கங்களைப் போல் தேர்தல் வாக்குறுதிகளை மீறி செயல்படுமாக இருந்தால் அவர்களுக்கு வாக்களித்த தமிழர்கள் கூட எதிராக திரும்புவதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

ஆகவே அனுர அரசு 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அதேபோல் தமிழர்களுக்கு ஒரு அரசியல் ரீதியான நிரந்தர தீர்வை வழங்குவதற்கான புதிய அரசியலமைப்பில் ஊடாக அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

அதற்கு அப்பால் அந்த உரிய தீர்வானது அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும். தமிழர்களுக்கான அந்த தீர்வு ஒன்றிணைந்த இலங்கைக்குள் சுயநிர்ணய அடிப்படையிலான தமிழர்களை தான் தமிழர்கள் தங்களை தாங்களே ஆளக் கூடிய வகையிலாக அமைய வேண்டும் என்பது எனது நிலைப்பாடு - என்றார். (அ)

## கிணற்றுக்குள்...

மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-05)

## கல்வி...

நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்திருந்த நூற்றுக்கும் மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்பார்த்த முறைமை மாற்றம் இதுதானா ? இதற்காகவா வாக்களித்துள்ளோம்? . பிரச்னைக்கு தீர்வு இல்லையா? என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோஷங்களை எழுப்பினர்.

இதன் போது பொலிசார் அவர்களை வீதியிலிருந்து அகற்ற முற்பட்ட தருணத்தில் பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனை அடுத்தே மூவர் கைதுசெய்யப்ட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்(அ)

## இன்று...

உறுதியேற்பு என்பன இடம்பெற்றன.

அதன்பின்னர் சபை ஒத்திவைக்கப்பட்ட பிறகு ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை இடம்பெற்றது. எனவே, இன்று முதலே பாராளுமன்றத்தில் வழமையான நடவடிக்கைகள் இடம் பெறவுள்ளன.

அந்தவகையில் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைமீது முற்பகல் 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை விவாதம் இடம்பெறவுள்ளது.

மறுநாள் 04 ஆம் திகதியும் குறித்த விவகாரம் தொடர்பிலேயே முற்பகல் 9.30 மணி முதல் மாலை 5 மணிவரை விவாதம் இடம்பெறவுள்ளது.

டிசெம்பர் 5 ஆம் திகதி இடைக்கால கணக்கறிக்கை முன்வைக்கப்படவுள்ளது. 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் அது தொடர்பில் விவாதம் நடத்தப்படவுள்ளது. (அ)

## இனப்பிரச்னை...

அரசியல் சாசனம் எழுதப்படவேண்டும்.

எங்களுக்கு இனப்பிரச்னை இருக்கிறது. அதற்கு தீர்வு தருகின்ற வகையில் புதிய அரசியல் சாசனம் அமைய வேண்டும் என்பது எமது கோரிக்கையாக உள்ளது.

அரசியல் சாசனம் எழுதப்படுகின்ற போது தமிழ் தரப்புக்களையும், தமிழ் தரப்புக்களின் ஆலோசனைகளையும் பெறவேண்டும் என்பது எமது கோரிக்கையாக உள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டத்தை அதாவது இலங்கை இந்திய ஒப்பந்தத்தை எந்த காலத்திலும் புதிய அரசியல் சாசனத்தின் ஊடாக நிறுத்தக்கூடாது. அதனை நிறைவேற்ற வேண்டும். இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்பது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அழிக்க முடியாத ஒப்பந்தமாக காணப்படுகின்றது.

எனவே புதிய அரசியல் சாசனத்தை எழுதி அதனை இல்லாது ஒழிக்கும் சூழலை தற்போதைய புதிய அரசாங்கம் , ஜனாதிபதி அவர்கள் செய்யக்கூடாது.

பெருமளவான மக்கள் அவரை நம்பி வாக்களித்து உள்ளனர். தமிழ் மக்களும் அதிக அளவில் வாக்களித்துள்ளனர்.

எனவே தமிழ் மக்களின் இனப் பிரச்னையை தீர்க்கின்ற வகையிலே புதிய அரசியல் சாசனம் அமைய வேண்டும்.

அதேபோல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் 13 ஆவது திருத்தச் சட்டமும் நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை புதிய அரசாங்கமும் ஜனாதிபதியும் செயல்படுத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக உள்ளது - என்றார். (அ)

## ஐக்கிய...

கருணாதிலக்க 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். (அ)

## சிறீதரன்...

ஆகியோருக்கு இடையிலான சிநேகபூர்வ சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தல் அடுத்து, இனிவருங் காலங்களிலேனும் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி ஒன்றுபட்டுப் பயணிக்க வேண்டும் என்ற விடயம் பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டுவருகின்றது.

அதன்படி தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாக அண்மையில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

அதேவேளை இதுபற்றிக் கருத்து வெளியிட்டிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இத்தீர்வுத்திட்ட முன் மொழிவு குறித்தும், அதற்கு அப்பாலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டி ருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இதுபற்றிக் கலந்துரையாடும் நோக்கில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் சிறிதரனின் இல்லத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரனும் கலந்துகொண்டார்.

இதன்போது அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடியவகையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு உள்வாங்கப்படவேண்டியதன் அவசியம் குறித்தும், அதனை இலக்காகக்கொண்டு அடுத்தகட்டமாக முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இருதரப்பினரும் ஆராய்ந்தனர்.

அத்தோடு தமிழர்களுக்கான தீர்வு விடயத்தை ஒரு பொதுவேலைத்திட்டத்தின் ஊடாக அணுகவேண்டும் என்ற கொள்கை ரீதியான நிலைப்பாடு தொடர்பில் இங்கு இருதரப்பினரும் தமது இணக்கத்தை வெளிப்படுத்தினர். (அ)

## உக்ரைனுக்கு...

எதிராக போரிடுவதற்கு நிர்ப்பந்திக் கப்பட்டுள்ளனர் என அண்மையில் காணொளி ஒன்று வெளியாகியிருந்தது.

குறித்த காணொளியில் இராணுவ உடையணிந்து பேசிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்டு, உக்ரெய் னுக்கு எதிராக போரிடுவதாக கூறியிருந் தனர்.

எனினும், இதனை முற்றிலும் மறுத்துள்ள ரஷ்ய தூதுரகம், இவ்வாறான தகவல்கள் ஆதாரமற்றவை மற்றும் அடிப்படையற்றவை என்றும் கூறியுள்ளது.

எவ்வாறாயினும், இந்த தகவல் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். மேலும், இலங்கை ரசியா இடையிலான பாரம்பரிய நட்புறவை சீர்குலைக்கும் நோக்கில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ரணிலின் பாதையிலேயே பயணிக்கிறது அநுர அரசு!

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 03

**அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாதையிலேயே பயணிப்பதாக பொதுஜன பெரமுன - பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

**பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் ஜனநாயகம் மோசமான நிலையை அடைந்துள்ளமையையே காண முடிகின்றது. சமூக வலைத்தளங்களின் ஊடாக மக்கள் மனதில் குரோதத்தை மக்கள் விடுதலை முன்னணி வலுவடைய செய்தது.

அதேபோன்று மக்களின் பணத்தை ராஜபக்ஷர்கள் உகண்டாவுக்கு கொண்டு சென்றுள்ளதாக கூறி மக்கள் மனதில் குரோதத்தை தூண்டி அப்பாவி பாராளுமன்ற உறுப்பினரை கொலை செய்து எமது உறுப்பினர்களின் வீடுகளுக்கு தீவைக்கும் நிலையை உருவாகிய மக்கள் விடுதலை முன்னணி தமது கையில் ஆட்சி அதிகாரம் வந்தமையை தொடர்ந்து சமூக ஊடக செயற்பாட்டாளர்களை கைது செய்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சமூக ஊடக செயற்பாட்டாளர்களை விடுவிக்க தேவையான நகர்வுளை முன்னெடுக்க நாம் கட்சி என்ற வகையில் தயாராகவுள்ளோம்.

சமூன ஊடக செயற்பாட்டாளர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்த பொலிசார் பிரபாகரனை நாட்டின் கடவுள் என விழித்து, மாவீரர் தினத்தை அனுஷ்டித்தவருக்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காமையை இட்டு கவலையடைகின்றோம்.

அரசாங்கம் மக்களுக்கு காண்பித்தமைக்கு புறம்பான பாதையில் பயணிக்கின்றமையையே அவதானிக்க முடிகின்றது. எரிபொருள் விலை அதிகரிப்பு அமைச்சர் தரகுப்பணத்தை பெற்றுக்கொண்டதே காரணம் என கூறினர். ஆனால் தற்போதைய சூழலுக்கு காரணம் என்ன என அரசாங்கம் தெரியப்படுத்த வேண்டும்.

நாணய நிதிய உடன்படிக்கை உள்ளடங்கலாக நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என கூறிய அரசாங்கம் தற்போது முன்னாள் ஜனாதிபதி ரணிலின் பாதையில் பயணிப்பதைய காணப்படுகின்றது - என்றார். (அ)

## இ.போ.ச. கிளிநொச்சி சாலையின் ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு!



கிளிநொச்சி, டிசெ. 03

இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலை ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

நிர்வாகத்தில் இடம்பெறும் பிரச்னைகளை தீர்க்க வலியுறுத்தி குறித்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சாலையில் இடம்பெறும் நிர்வாக ரீதியிலான பிரச்னைகளை உயரதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படாமையால் தாம் நேற்று பணிப் புறக்கணிப்பை முன்னெடுக்கத் தீர்மானித்ததாக ஊழியர்கள் தெரிவித்தனர். (அ)

## அனுபவம் இன்றி செயற்படும் அரசு!

### நிர்மல் தேவ்சிறி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 03

அரசாங்கம் அனுபவம் இன்றி செயற்பட்டு வருவதாக பேராசிரியர் நிர்மல் தேவ்சிறி தெரிவித்துள்ளார்.

இணைய வழி காணொளியொன்றின் மூலம் இந்த விடயத்தை அவர் கூறியுள்ளார்.

மாவீரர் தின நிகழ்வுகளை பிரசாரம் செய்த குற்றச்சாட்டின் பேரில் மூன்று சமூக ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சமூக ஊடகங்களை கட்டுப்படுத்துவது அரசாங்கத்தின் அரசியலை களங்கப்படுத்திக்கொள்ளும் செயற்பாடாகும் என அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் சவால்களை எதிர்கொள்ளும் விதம் அனுபவமில்லாமையை பிரதிபலிப்பதாக பேராசிரியர் தேவ்சிறி கூறினார்.

அரசாங்கத்தின் இந்த செயற்பாடு அரசாங்கத்தை மட்டுமன்றி அரசாங்கத்தினை ஆட்சி பீடம் ஏற்றுவதற்கு பாடுபட்ட அனைவருக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் என அவர் சுட்டிகாட்டினார்.

தற்போதைய அரசாங்கத்தை விடவும் நிலையான பிரபல்யத்தைக் கொண்டிருந்த ராஜபக்ஷ அரசாங்கம், அரச அடக்குமுறைகள் காரணமாக வீழ்ச்சியடைந்தது என நிர்மல் தேவ்சிறி தெரிவித்தார். (அ)

## காஞ்சனவின் சூத்திரத்தையே செயற்படுத்தும் அநுர அரசு!

### கூறுகின்றார் நளின் பண்டார

கொழும்பு, டிசெ. 03

முன்னாள் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் எரிபொருள் விலைச் சூத்திரத்தையே அரசாங்கம் செயற்படுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் விலையில் ஏற்பட்ட மாற்றத்தினால் எந்த பயனும் இல்லை. அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாதையிலேயே பயணிக்கின்றது. அதேபோன்று காஞ்சன விஜயசேகர முன்னாள் அமைச்சரின் விலைச் சூத்திரத்துக்கு அமையவே அரசாங்கம் செயற்படுகின்றது.

அத்துடன், மாவீரர் தினத்தை அணி திரண்டு நினைவு கூர அனுமதியளித்துவிட்டு சமூக செயற்பாட்டாளர்களை கைது செய்து சிறையில் அடைத்துள்ளமைக்கு எதிர்ப்பை தெரிவிக்க விரும்புகின்றோம். இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக அணி திரளவுள்ளோம் - என்றார். (அ)

## 4 இலட்சத்து 75ஆயிரத்து 225 பேர் சீரற்ற காலநிலையால் பாதிப்பு!

கொழும்பு, டிசெ. 02

நிலவிய பலத்த மழையுடனான வானிலை காரணமாக 24 மாவட்டங்களில் 4 இலட்சத்து 75 அயிரத்து 225 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் 17 பேர் உயிரிழந்துள்ளதுடன் 20 பேர் காயமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் 10 ஆயிரத்த 24 பேர் 99 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன் 65 ஆயிரத்து 20 பேர் உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இதேவேளை பதுளை, கண்டி, மற்றும் இரத்தினபுரி உள்ளிட்ட 9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண் சரிவு அபாய எச்சரிக்கை இன்று மாலை 4 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தாழ்நிலப் பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கை தளர்த்தப்பட்டுள்ளது. (அ)

## சம்பந்தனின் இல்லம் கையளிப்பு

கொழும்பு, டிசெ. 03

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தனின் உத்தியோகபூர்வ இல்லம், அவர் இறந்து ஐந்து மாதங்களின் பின்னர் நீதித்துறை, அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை, உள்ளூராட்சி மற்றும் தொழிலாளர் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ இல்லத்தை கையளிப்பதற்கு அமைச்சு ஐந்துக்கும் மேற்பட்ட நினைவூட்டல்களை வழங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.


கொழும்பு 7, மலலசேகர மாவத்தையில் உள்ள இந்த உத்தியோகபூர்வ இல்லம் சம்பந்தனுக்கு 2015 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

பின்னர், நல்லாட்சி அரசாங்கத்தின் போது 2019 பெப்ரவரி 26 ஆம் திகதி முன்னாள் அமைச்சர் கயந்த கருணாதிலகவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம், சம்பந்தன் இருக்கும் வரையில் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் வழங்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லம் சுமார் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. அதன் பராமரிப்பு பணிகள் அனைத்தும் கடந்த காலத்தில் அரசால் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த உத்தியோகபூர்வ இல்லம் டிசெம்பர் 12ஆம் திகதி அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என சம்பந்தனின் மகள் எழுத்து மூலம் அமைச்சுக்கு அறிவித்திருந்த போதிலும் அன்றைய தினம் அது கையளிக்கப்படவில்லை. (அ)

## வீதி போக்குவரத்தைக் கண்காணிக்க களமிறக்கப்பட்டுள்ள ட்ரோன் கமெரா!



கொழும்பு, டிசெ. 03

வீதிகளில் வாகன போக்குவரத்தை கண்காணிக்க நேற்று முதல் மீண்டும் ட்ரோன் கமெராக்கள் பயன்படுத்தப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தவகையில், கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பதில் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

## லொஹான் ரத்வத்த தொடர்ந்து மறியலில்

கொழும்பு, டிசெ. 03

சட்டவிரோதமான முறையில் கார் ஒன்றை பயன்படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவி ஆகியோரின் பிணை கோரிக்கையை நுகேகொடை பிரதான நீதவான் திருமதி ருவானி ஜயவர்தன மீண்டும் நிராகரித்துள்ளார்.

இதன்படி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் மற்றும் அவரது மனைவி ஆகியோரை எதிர்வரும் 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பிரதான நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவியான திருமதி ஷஷி பிரபா ரத்வத்தவின் மிரிஹான அம்முதெனிய, சாலாவ வீதியிலுள்ள மூன்று மாடி வீடொன்றில் இலக்கத் தகடுஇல்லாத சொகுசு கார் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது.

குறித்த கார் தொடர்பில் மிரிஹான பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது அது சட்ட விரோதமான முறையில் பொருத்தப்பட்ட கார் என தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த காரை பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவி ஷஷி பிரபா ரத்வத்தவும் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org